உள் நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-வரு ஐப்பசி-மீ 26-உ (11—11—1934) | மலர் 12.

## மதப் பித்தலாட்டம்.

(சு-ம-பாவலர் நாகை தோழர் பி. அம்மைநாதன் இயற்றியது)

"வாசம் கமகமென" என்னும் மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி, தாளம் ஆதி.

(1) மதமெனும் தொத்துநோயால் மக்கள் முயற்சிவீணில்
மாய்வதை விட்டொழிப்ப தெக்காலம்—பண்டைத்
தீயர்கள் ஆக்கிவைத்த திக்கோலம்—இந்த
மாநில மீதினி லேநம திந்தியர்
ஆனவர் கள்அறி யாமையின் காரணம்
வாடுறுர் நடைப்பிணங்க ளாய்நின்று—நகை
யாடுறுர் அந்நியர்கள் நமைக்கண்டு (மத)

(2) பெண்களுக் குக்கடவுள் பிள்ளை வரம்கொடுத்தால்
பிரியமாய்ப் புருஷனென்ப தெதற்காக—மணம்
புரிவதும் கூடுவதும் எதற்காக—மதப்
பித்தர்கள் நித்தமும் வெட்கமில் லாமலே
கத்துவதைப்புவி யொப்புவ தெப்படி
பெண்ணுடன் ஆண்கள்சேரா திடல்வேண்டும்—ஆண்கள்
அன்னியில் சேய்கள்பிறந் திடல் வேண்டும் (மத)

(3) உயிர்கொடுத் தசாமிக்கு மயிரைக்கொடுப்பதிது
உத்தம பக்தர்களின் உபகாரம்—உண்மைப்
புத்திக்கும் இவர்கட்கும் வெகுதூரம்—தெய்வ
பூசை புரிந்து தரித்திரராகவே
நாசம் அடைந்து தவித்துயிர் மாய்வது
போதுமே யேழைமக்கள் இனியேனும்—சுய
நீதமே சார்ந்துநன்மை பெறவேணும் (மத)

(4) "அவனன்றி யோரணு வும்அசை யாதென்போர்கள்—
ஆஸ்தியைக் காத்திடுவ தெதற்காக—வெகு
நேர்த்தியாய்ப் பூட்டுவதேன் குறிப்பாக—மன
நிம்மதியற்ற பெருந்தன வந்தர்கள்
நம்மைஏ மாற்றிடும் தன்மைகளென்பதை
நேசமாய் அம்மைநாதன் சொற்கீதம்—உலகில்
பேசிடும் உண்மையான நற்போதம் (மத)

ரோஜா முத்தையா

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள

### இதா பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 |
| விவாக விடுதலை | 0-4-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 |
| மனித உற்பவம் | 0-8-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 |
| உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சாமிகளின் அடிமை | 0-12-0 |
| லோகல்போர்டு ஆக்ட் (சென்னை) | 2-0-0 |
| பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| பெண்ணுரிமைக் கீதங்கள் | 0-1-0 |
| சமதர்மக் கீதங்கள் | 0-0-6 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—

S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—

சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணு ஒன்று.
விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—

வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—

மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

நாகர் கோவிலிலிருந்து தோழர் பி. சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோரும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0
மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

—0—

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0
விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

### விதவையர் விடுதலை முழக்கம்.

இது விதவைகள்படும் கொடுமைகளையும், அவர்களின் விடுதலைக்குரிய வழிகளையும் விளக்கும் இனிய வர்ன மெட்டுகளாலமையப்பெற்றது. 1½ அணு ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்டில அனுப்பப்படும். விலை அணு ½.
விலாசம்:—க. அ. புன்னைமுத்து
கல்லூரணி, அருப்புக்கோட்டை வழி

### கொளும்பு.

இவ்விடத்தில் குடி அரசுப்பதிப்பக புஸ்தகங்களும், பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக புஸ்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்.
விலாசம்:—
K. N. S. Pillai,
News Agent 281, 2nd Div.
மருதானை, கொளும்பு.

### ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.

# ரஷியச் செய்திகள்.

(C. R. D.)

ரஷியாவில் பதின்மூன்று வருடங்களுக்கு முன் பெண்களில் படித்தவர்கள் 100-க்கு 44 பேர்களே யிருந்தனர். 13 வருடங்களுக்குப் பிறகு 100-க்கு 92 பேர்களாக அதிகரித்திருக்கின்றனர்.

1,13,000 பெண்கள் ஜட்ஜுகளாக வேலை பார்க்கின்றனர்.

பெண்கள் தாழ்ந்தவர்கள் என்கிற மனப்பான்மைஒழிந்து இன்று பெண்கள் ஆண்களுக்குச் சரி நிகர் சமமாக சமூக, அரசியல் துறைகளில் ஆண்களோடு கலந்து வேலை செய்கின்றனர். அதோடு அறிவுத் துறையிலும் ஆண்களோடு போட்டியிடத் தொடங்கி ஆண்களைத் தோற்கடித்து வருகின்றனர்.

ருஷியப் பெண்கள் இவ்வளவுக்கு முற்போக்கடைந்தது எப்படியென்றால் ரஷியாவில் தனித் தனிக் குடும்பங்கள் கிடையா. பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய குடும்பமாக சமூக விடுதிகளில் வசிக்கின்றனர். அப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த எல்லோருக்குமாக ஒரு அறையில் சாப்பாடு தயாரிக்கப்படுகிறது. ஆகவே பெண்களுக்குச் சமயல் வேலை கிடையாது. ஒவ்வொரு பெண்ணும் அடுப்பங்கரையில் செலவிட்டு வந்த காலம் மிச்சமாயிற்று.

இரண்டாவது ஒவ்வொரு தாயும் தங்கள் தங்கள் குழந்தைகளை தாங்களே பாதுகாத்துக் காப்பாற்ற வேண்டுமென்கிற ஐயமில்லாமற் போய் விட்டது. இந்தப் பொறுப்பை குழந்தை விடுதிகள் ஏற்றுக்கொண்டதனால் பெண்களுக்கு இதில் செலவிட்டு வந்த காலமும் மிச்சப்பட்டது.

மூன்றாவது அப் பெண்களுக்கு பிரசவத்திற்கு முன்னும், பின்னும் முழுச் சம்பளத்தோடு ரஜா கொடுக்கப்படுகிறதனால் நல்ல ஓய்வும், சௌகரியமும் ஏற்படுகிறது. மேலும் வேலை நேரங்களில் இடை வேளைகளிலும் விடுதிகளில் விட்டுவந்த குழந்தைகளை கவனித்து வருவதற்காக ஓய் வளிக்கப்படுகிறது. இவ்வளவு சௌகர்யம் அவர்களுக்கிருப்பதனாலே தான் தீவிர முற்போக்கடைந்து வருகின்றனர்.

1913 வருடம் 6,35,000 பெண்கள் கைத் தொழில்களில அமர்ந்திருந்தனர். 1932ம் வருடம் கைத்தொழில்களிலுள்ள பெண்களின் எண்ணிக்கை 1,720,000-க்கு உயர்ந்து விட்டது. அதாவது கைத்தொழில்களில் ஆண்கள் 100-க்கு 200 வீதமும், பெண்கள் 100 க்கு244 வீதமும்அதிகரித்திருக்கின்றனர்.

ரஷியத் தொழிலாளருக்கு ஒரு வாரத்தில் ஐந்தே நாட்கள் தான் வேலை. ஒரு நாளில் ஏழு மணி நேரந்தான் வேலை. மேலும், சம்பளத்தோடு கட்டாய லீவ் உண்டு. வியாதியால் பீடிக்கப் படுங்காலத்திலும், வேலை செய்யச் சக்தியிழந்த காலத்திலும், வயது முதிர்ந்து கிழமாய்ப் போகும் காலத்திலும் தொழிலாளருக்கு சட்டம் தகுந்த பாதுகாப் பளித்திருக்கிறது

மக்களுக்கு படிப்பிலிருக்கும் ஆர்வத்தின் பயனாக படித்தவர்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. மேலும், அங்குள்ள கல்விச் சாலைகளுக்கும் அறிவுக்கும் பிரிக்க முடியாத சம்பந்தமிருக்கிறதனால் மக்களின் அறிவு மேலோங்கிச் செல்ல ஏதுவானதோடு மக்களை மாக்களாக்கி வந்த சமூகப் பிணிகளை இருந்தவிடம் தெரியாமலோட்டவும் ஏதுவாயிற்று.

விபசாரத்தை ஒழிக்க எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியால் இன்று ரஷியாவில் விபசாரம் ஒழிந்துவிட்டதென்றே சொல்லலாம். விபசாரம் ஒழிக்கப்பட்டு வருவதால் அதனோடு சம்பந்தப்பட்ட கொடிய மேகரோகவியாதிகளும் பலங்குன்றி ஓட ஆரம்பித்து விட்டன.

குடியை ஒழிப்பதற்கும் அதி தீவிரமான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. குடி அரக்கன் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டான். அதைக் கீழ் கண்ட புள்ளி விபரங்களிலிருந்து அறியலாம்.

1925ல் ரஷிய ஜனங்கள் தலைக்கு 88 விடர்கள் வீதம் குடித்திருக்கிறார்கள் ($4\frac{1}{2}$ விடர்கள் கொண்டது 1 காலன்) அதாவது 7/375 காலன்.

ஸ்பெயின் தேசத்தினர் தலைக்கு 15 விடர்கள் வீதம் அதாவது $3\frac{1}{3}$ காலன்கள் வீதம் குடித்திருக்கின்றனர். ஜெர்மன் தேசத்தினர் தலைக்கு 26 விடர்கள் அதாவது $5\frac{3}{4}$ காலன் வீதம் குடித்திருக்கின்றனர்.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் முன்பு ரஷியன் தன்னுடையவருமானத்தில் 100-க்கு 28 வீதம் மது மானத்திற்காகச்செலவழித்து வந்தான். இன்றையதினம் 100-க்கு 3-வீதமே அதில் செலவிடுகிறான். இதிலிருந்து மது விலக்கு முயற்சியின் வெற்றியைக் காணலாம்.

## கல்வி.

நம் நாட்டு மக்களுக்கு கல்வி கற்பிக்க புத்தகங்களை மட்டுமே முக்கியகருவியாக உபயோகிக்கின்றனர். ரஷியாவில் அப்படியல்ல. பலவிதமான சாதனங்களால் கல்வி கற்பிக்கப்படுகிறது. துண்டுப்பிரசுரங்கள், படக்காக்ஷிகள், ரேடியோ, நாடகம், பொருட்காட்சி, சுற்றுப்பிரயாணம், பிரசங்கம் ஆகிய இவற்றின் மூலமாகவெல்லாம் கல்வி போதிக்கப்படுகிறது.

17 வருட காலத்திற்குள் வெள்ளை, வெட்டை முதலிய விபசாரத்திலிருந்து உற்பவிக்கும் கொடிய வியாதிகள் பாதிக்கு மேல் ஒழிந்து விட்டது. மாஸ்கோ நகரில் மட்டும் மேற்கண்ட வியாதிகள் 100-க்கு $37\frac{1}{2}$ வீதம் ஒடுங்கி விட்டன.

1912ல் 100-க்கு 59 வீதம் மூலிகைகளும், மருந்து வகைகளும் ரஷியாவுக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாயிற்று.

1927—28ல் 100-க்கு 12 வீதம் இறக்குமதியாயிற்று. 1933ல் 100-க்கு 3 வீதமே இறக்குமதியாயிருக்கிறது. மருந்து கடைகளும் கூட இன்றைய ரஷிய அரசாங்கத்தின் கீழ் வந்து விட்டபடியால் மருந்து வகைகளில் இதற்கு முன் வியாபாரிகள் செய்துவந்த மோசமும், பித்தலாட்டமும் ஒழிந்து விட்டது.

வீட்டு வசதியும், வாழ்க்கை வசதியும் அபாரமாக விருத்தியடைந்திருக்கிறது.

மூன்று வருடங்களுக்குள் லக்ஷக்கணக்கில் ஜனத்தொகைகொண்ட பல நகரங்கள் சிருட்டிக்கப்பட்டன.

1926லிருந்து 1931-க்குள் ஒவ்வொன்றும் ஒரு லக்ஷம் ஜனங்களைக் கொள்ளும்படியான 15 புதிய நகரங்கள் உண்டாக்கப்பட்டன. மேற்கண்ட காலத்திற்குள் 115 நகரங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. இன்றைய தினம் 366 நகரங்கள் நல்ல ஜலவசதி கொண்டதாயிருக்கின்றன.

1928-க்கும் 1932-க்கும் உள்ள மத்திய காலத்திற்குள் 2,90,00,000 (இரண்டுகோடியே தொண்ணூறுலட்சம்) சதுர கெஜ விஸ்தீரணமுள்ள இடத்தின் மேல் கட்டடங் கட்டி 16 00,000 (பதினாறுலக்ஷம்) குடும்பங்களுக்கு வசிக்க இடமளித்தது.

பொதுச்சாப்பாட்டு விடுதிகளில் சாப்பிட்டு வருகிறவர்களின் எண்ணிக்கை விபரம்:— தொழிலாளர் 50 லக்ஷம், ஆபீஸ் குமாஸ்தாக்களும், விவசாயிகளும் சேர்ந்து 35 லக்ஷம். இந்தச்சாப்பாட்டு விடுதிகளை அரசாங்கம் அடிக்கடி மேற்பார்வையிடுகிறது.

1931ல் 13,400 போஜன அறைகளிருந்தன. 44 சமையலறைகளிருந்தன. அதில் ஒவ்வொன்றிலும் ஒரு நாளைக்கு 30 அல்லது 35 ஆயிரம் பேர் சாப்பிடக்கூடிய அளவுக்கு சமையல் நடக்கின்றது.

மாஸ்கோ நகரில், ஒரு நாளில் 2,50,000 ஜனங்கள் சாப்பிடக் கூடிய அளவிற்கு ஒரு பெரிய சாப்பாட்டு விடுதியைக்கட்டி முடித்திருக்கிறார்கள்.

### உணவுப்பொருள் விருத்தி.

| வருடம் | கான்கள் (மூகத்தல் அளவு) | |
|---|---|---|
| 1925-26 | 457 | லக்ஷம் |
| 1929 | 1038 | ” |
| 1830 | 2666 | ” |
| 1931 | 6000 | ” |

மேற்கண்ட புள்ளி விபரங்களிலிருந்து உணவுப்பொருள்களின் விருத்தியைக் காணலாம்.

சாமர்த்தியம் பெற்ற டாக்டர்கள் பார்வையின் கீழ் தேகப்பயிற்சிச் சங்கங்களில் ஆண்களுக்கு, வேலை செய்வதற்கும், போர் புரிவதற்கும் உபயோகமான முறையில் தேகப்பயிற்சியளிக்கப்படுகின்றது. பயிற்சி முடிந்ததும் ஒவ்வொருவருக்கும் ஒரு பேட்ஜ் கொடுக்கப்படுகிறது. அதில் "வேலை செய்யவும், போர் செய்யவும், தயாரிக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது.

6,00,000 பேர் இம்மாதிரி பேட்ஜ்கள் பெற்றிருக்கின்றனர். இவ்விதம் தேகப்பயிற்சி பெற்ற வாலிபர்களை மற்ற சாதாரண வாலிபர்களோடு ஒத்திட்டுப் பரிசோதித்ததில் தேகப்பயிற்சி பெற்ற வாலிபர்கள் மற்ற வாலிபர்களை விடக் கெட்டிக்காரர்களாயும், வலிமை பெற்றவர்களாயுமிருப்பதாகத்தெரிகிறது.

வியாதியடைந்த தொழிலாளர்கள் வியாதி குணமடைவதற்குச் சாதகமான ஊர்களுக்குப்போய்க் குணப்படுத்தி வருவதற்கான சௌகர்யங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டு விவசாயப் பண்ணைகளில் லக்ஷக்கணக்கான குடும்பங்கள் வேலை செய்து வருகின்றன. அறிவையும் அமைதியையும் அளிக்கவல்ல நந்தவனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. சுகாதார வசதிகள் , நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் யாதொரு வித்தியாசமுமின்றி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஒரு புதுமையான விஷயமென்னவென்றால் அதிக—தூரப்பிரயாண ரயில் வண்டிகளில்ஒரு தாயும், தன் குழந்தைகளும் சௌகரியமாகப் பிரயாணம் செய்யத்தனி அறைகள்அமைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த அறைகள் ஒவ்வொன்றிலும், குழந்தைகள் குளிப்பதற்காக துளிப்புக்குழாயும், குழந்தைகளின் துணிகளைத் துவைப்பதற்காக துவைப்பு வசதியும், பிறகு அத்துணிகளை உலர்த்துவதற்காக எலக்ட்ரிக் உஷ்ணத்தையும், குழந்தைகள் ஆகாரமான பால் கெடாமல் வைத்திருக்க ஐஸ் பெட்டியும், குழந்தைகள் விளையாட விளையாட்டறையும் இன்னுமிது போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து குழந்தைகள் விஷயத்தில் அரசாங்கம் எவ்வளவு கவனம் செலுத்துகிறது என்பது விளங்கும்.

இப்படியே ஒவ்வொரு துறையிலும் நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்த வண்ணமாகவே விளங்குகிறது.

# மதமொழிக்கும் உலகப்புரட்சி.

## ஜோசப் மெக்காபி எழுதியதின் மொழிபெயர்ப்பு.

சிலவருஷங்களுக்கு முன், ஆக்ஸ் போர்டு சர்வகலா சங்கத்தைச் சேர்ந்த ஓர் அழகிய அறையில் பண்டிதர்கள் நிறைந்த கூட்டமொன்றில் நானும் போய் உட்கார்ந்தேன். அப்போது நாங்கள் ஒரு புதிய விஷயத்தைப்பற்றிவார்த்தையாடி பொழுது போக்கினோம். அவ்விஷயம் பண்டிதர்களுக்கு ஏற்றது தான். நாங்கள் யாவரும்சரித்திரத்திலோ, அல்லது இலக்கியத்திலோ ஏதேனும் ஒன்றில் நல்லபாண்டித்தியமுடையவர்களாகவேஇருந்தோம். எங்களில் ஒவ்வொருவருக்கும் எப்படிப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கப்பிரியம் என்பதைப்பற்றி எடுத்துப்பேசினோம்.

உடனே நாங்கள் எங்களுடைய முடிவுப்படி பயபக்தியுள்ள எகிப்திலிருந்து, வியப்பளிக்கும் பாபிலோனுக்கும், மோகமிகுந்த சிரியாவிற்கும், மானஸீகப்பிரயாணம் செய்தோம். அலங்கார மிகுந்த கலைகளைச் சூடிய எதென்ஸ் நகரமும், திட்டவட்டமான ஒழுக்க முறைகளைக்கொண்ட ஸ்பார்ட்டா நகரமும், மகா வெற்றிப் பிரதாபங்களைப் பெற்ற ரோமாபுரியும் எங்களில் யாவரையும் தேன் குடித்த நரிபோல் சொக்க வைத்தன. கலைகளின் முன்னேற்றத்தில்திகழ்ந்த இத்தாலியும், 14-வது லூயி காலத்திய பிரான்ஸும், ஷேக்ஸ்பியர்) காலத்திய இங்கிலாந்தும், அவ்வக்காலத்திய மக்கள் வாழ்க்கையின் இயல்பையும், சுதந்திரத்தையும், எங்கள்மானசிகநோக்கின் முன் சித்திரித்துக்காட்டி நின்றன.

ஆனால்நாம்வசித்துவரும் தற்காலமேஎக்காலத்தையும் விட மகா ருசிகரமானதும், மகோன்னதமானதும்என்று நாங்கள்எல்லோரும் பொதுவாய் ஒப்புக்கொண்டோம். தற்காலந்தான் உலகம் சீர்பட்டு, புத்துயிரும் புதுவாழ்வு மடையும் நோக்கமும், ஊக்கமுங்கொண்டு ஆக்கமடையும் காலமாயிருக்கிறது. நம்முடைய ஆசைகளை உருவாக்கப் பெரும் பெரும் கலா நிபுணர்களோ, அல்லது அவைகளின் பலன்களைக் கண்டுபிடிக்கச்சிறந்த அரசியல் அறிஞர்களோ இல்லை. ஆயினும் மனிதன் இதற்கு முன் அறிந்திராத சிலாக்கியமான ஒரு நல்லஉலகம்அமைவதற்கு அதுஎப்படியோ கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. உலகம் இதற்கு முன் பெற்றிராத ஒருவித ஆக்ஷ உணர்ச்சியும், ஒருமைப்பான சக்தி வியாபகமும் நம்மிடம் தோன்றிவருகின்றன.

புராதன சரித்திர காலங்களில் மிகப்பெரிய நாகரீகஸ்தாபனங்கள் பல இருந்தன. அவைகளில், போர்ச்சேவகத்தைப் பொறுத்தும், அதற்கான மானிப அனுபவத்தைப் பொறுத்துமே, அரசுகள் நடைபெற்று வந்தன. யுத்தவூழியத்தைப் பொறுத்தே பல்லாயிர வருஷங்களாக முடிஅரசுகள் நீடித்து வந்தன. ஆனால் நம் நாளிலோ பத்துவருடகாலத்தில், ஐந்து சிம்மானசனங்கள் குப்புறக் கவிழ்த்தப்பட்டுப் போயிருக்கின்றன. இன்னும் ஐந்துசிம்மாஸனங்கள் அஸ்திவாரம் குலைந்து ஆடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே பண்டைக்காலம் தனது வாழ்வை நம்மிடம் ஒப்படைத்து விட்டு விடை பெற்றுக் கொண்டதென்று, ஒவ்வொரு பாரம்பரியத்திற்கும், ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும்நாம் நியாயம் எடுத்துக்காட்டலாம். இராக்ஷஸ பலம் படைத்த சக்திகளையெல்லாம் நாம் நமக்கு அடிமையாக்கி வருகின்றோம். அவைகளைக்கொண்டு அதி அற்புதமான காரியங்களைச்சாதிக்கின்றோம். பண்டைக்காலத்திலிருந்த எந்த முனிவருக்கும் அவைகளைப் பற்றிய கடுகளவு ஞானமும் இருந்திருக்காது.

மனித வர்க்கத்தின் நீண்டநெடுங்கால சரித்திரம் நமக்குத்தெரியும். அது சம்பந்தமாகக் கிடைத்துள்ள ஆணித்தரமான ஆராய்ச்சிகளையும், சரித்திர உண்மைகளையும் அலசி ஆராய்ந்து பார்த்து, நமக்கு ஏற்பட்டிருக்கும் நவீனப் புரட்சியுணர்ச்சியின் முன் உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் வரவழைத்து நியாயங்கூற முற்படுகிறோம். இவ்வாறு செய்வதில் நாம் கொஞ்சமும் பின் தங்குவதில்லை. இதுவே நமது ஆராய்ச்சியில் தவறாத ஒருவிஷயம். மனித உரிமைகளைக் காப்பதே நமது தர்மம். இது உலகத்திற்கு நூதனமானது. உலகத்தில் மயக்கமும், மடமையும் மலிந்து கிடப்பதால், புராதன காலந்தொட்டு வழக்கமாயிருப்பவைகளையே நீதியென்றும், நெறியென்றும் மக்கள் நம்பி வருகிறார்கள். அப்படிப்பட்ட நம்பிக்கையால் தான் அரசர்களுடைய உரிமைகளும், அரசாங்கங்களுடைய உரிமைகளும் தெய்வீகம் பொருந்தியவை ஆயின. இதுவே எங்களுடைய தீர்மானம். உண்மையும், ஊழியமுமே எமது விருதுக்கொடி. இவற்றைப் பூர்த்தி செய்ய முடியாத எந்தப்பண்டைக்கால ஒழுங்கு முறைகளையும், குற்றவாளிகளைக் கொல்லும் பொருட்டு, பொதுச்சதுக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் 'சிரச்சேத' இயந்திரத்தில் போட்டு 'தும்சம்' செய்ய வேண்டுமென்று விரும்புகின்றோம்.

ஏதோ ஒரு அமெரிக்க நகரத்தில்இருந்து கொண்டு உலகத்தையே திருத்தியமைத்துப் போடப்போவதாகப் பாசாங்குப் பசப்பு வார்த்தைகளைச் சொல்லி நடிக்கும் வாலிபக்கூட்டத்தார்களின்விநோதமனோ ராஜ்யம் என்று என் வார்த்தைகளை நினைத்துவிட வேண்டாம். அவை இளம் பெண்களின் ஆகாசக்கோட்டையென்றும் கருதவேண்டாம். இன்று, மதத்தை யொழிக்க உலகமே புரட்சியில் ஈடுபட்டிருக்கிறது. துருக்கி தேசத்தின் புதிய அரசர், முகமதிய மதத்தின் வைதீகத்தைக்குழிவெட்டிப்புதைக்கத் தீவிரமாகப் போராடிக்கொண்டிருக்கிறார். இந்தியா, சீனு, ஜப்பான், எகிப்து முதலிய தேசங்களிலுள்ள மாணவர்கள் தங்கள் தங்கள் சமயக்கோட்பாடுகளைப்பற்றியும், தெய்வீக நூல்களைப்பற்றியுமுள்ள சரித்திரங்களைக் குறித்துவிவாதம் செய்து வருகிறார்கள். மாணுக்கர்கள் அங்ஙனம் தர்க்கித்து ஆராய்ச்சி செய்யும்போது அவைகளுக்கு மரியாதை யென்பதே காட்டுவதில்லை. சிக்காகோநகரத்தின் திறந்த பொதுவிடங்களில் ஜனங்கள் பகிரங்கமாகச் சாதாரண விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொள்வது போலவே அவர்கள் அவ்விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொள்கிறார்கள். பைபிள் வேதத்தின் பழைய ஏற்பாட்டை, தயவு தாட்சண்யத்திற்குக் கூடமரியாதையின்றி விவாதிக்கிறார்கள்.

உலகத்தின் நடுநாயகமான நகரங்களிலிருந்து, அத்தகையபுரட்சி இயக்கம் மலையடிவாரங்களுக்கும் கூட பரவிக்கொண்டு வனாந்தரங்களுக்கும்வருகிறது. நான்,வாலிபராயிருந்த ஒரு ஆப்பிரிக்கரைலண்டன்நகரத்தில் சந்தித்தேன். அவர் ஒரு தத்துவ சாஸ்திரவிற்பன்னர். அவருக்கு, மத்திய ஆப்பிரிக்க சர்வகலாசாலை ஒன்றில் சமயபேதங்களைப்பற்றிப் போதிக்கும் வேலையென்று தெரிய வந்தது. சமீபத்தில் வெளியான, வாழ்க்கைத் தத்துவங்களை நிரூபிக்கும் "பாட்டு ஆலா" என்னும் பிரஞ்சு நாவல் ஒன்றில் கிராமாந்தரங்களில் வசிக்கும் பூர்வக்குடிகள் தங்களுடைய வேலை முடிந்து வீடு திரும்பியதும் கடற்கரையோரங்களில் ஒன்றுகூடி எல்லா மதக் கொள்கைகளையும் இழிவாகப் பேசி எள்ளி நகையாடிக்கொண்டிருப்பது வழக்கமென்க் கூறப்பட்டிருக்கிறது. இன்று நாங்கள் மதப்புரட்சியைப் பற்றிப் பெயரளவில் பறைசாற்றி வருகிறோம் என்பது உண்மை. ஆனால், நாளைக்கு இப்புரட்சி இயக்கம் நுழையாத ஆப்ரிக்கா தேசத்துக் கருப்பு மனிதன் குடிசையோ அல்லது சைபீரியாப் பனிக்காட்டு எஸ்கிமோவின் குச்சோ இருக்க முடியாது என்பதே எங்களுடைய திடமான அபிப்பிராயம்.

இத்தகைய கொந்தளிப்பை, மக்கள் சரித்திரத்தில் ஒரு புதிய சக்தியின் எழுச்சியென்றே சொல்ல வேண்டும். மதத்தின் சரித்திரம் அற்புதக் கதையாகவே இருக்கிறது. அது விநோதமும் விசித்திரமும் நிறைந்த வரலாறு. மதத்தின் ஆரம்பத்தைப்பற்றியும் தெய்வீக வளர்ச்சியைப்பற்றியும் வேறு வெளியீடுகளில் சவிஸ்தாரமாகக் கூறுவோம். மதவளர்ச்சியும் புரட்சிகள் மிகுந்த கதைதான். அரச சந்ததியார் வீழ்வது போலவே தெய்வ சந்ததியாரும் வீழ்ந்திருக்கின்றனர். புதியசந்ததியார்களும் உதித்திருக்கிறார்கள். "கடவுள்கள் மறைந்து விடுகிறார்கள்; ஆயினும் கடவுள் இருந்து வருகிறார்" என்று ஒரு பிரபல மதப் பிரசாரகர் கூறினார். இது நல்ல சாதுரியமான வார்த்தைதான். ஆனால் இது ஒரு கேவலமான சரித்திரம்.

தற்காலத்தில் ஒரே கடவுளைப் பற்றிய கேள்விதான் உண்டே தவிர பல கடவுள்களைப்பற்றி மருந்துக்குக்கூட ஒன்றும் பேச்சில்லை. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், ஆசியாவில் ஒருவாறு நம்முடைய மதச்சரித்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

## சென்னை
## பச்சையப்பன் மண்டபத்தில்
# ராமசாமியின் முழக்கம்.
## A. ராமசாமி முதலியாருக்கு ஆதரவு.

இந்நகர தொகுதியில் இந்திய சட்ட சபைக்கு அபேட்சகராக நிற்கும் திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியாரை ஆதரிக்க 2-11-34ந்தேதி மாலை பச்சையப்பன் மண்டபத்தில் கூட்டமொன்று நடத்த ஏற்பாடு செய்திருந்தனர்.

பெண்கள் உள்பட நாலாயிரம் ஜனங்கள் திரண்டு வந்திருந்ததால் மண்டபத்தில் இடமில்லாமற்போகவும், சிலதினங்களுக்கு முன்பு நிகழ்ந்தது போல கூட்டத்தை பச்சையப்பன் கல்லூரி மைதானத்தில் நடத்த வேண்டியதாயிற்று. சர். ஷண்முகம் செட்டியார் தேக அசௌகரியத்தால் வரமுடியாமற் போனது பற்றி ஜனங்களுக்கு மிக்க ஏமாற்றத்தை உண்டு பண்ணியது. ஏராளமான ஜனங்கள் வந்திருந்தும் கூட்டம் மிக்க அமைதியாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் நல்லுசாமிபிள்ளை தலைமை வகித்தார்.

### ஈ. வெ. ராமசாமி.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பலத்த கரகோஷத்திற்கிடையே எழுந்து பேசுகையில் சொன்னதாவது:—"இன்று தோழர் ஷண்முகம் இக்கூட்டத்திற்கு வந்துபேசவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் அவருக்கு தேக அசௌக்கியமேற்பட்டிருப்பதை முன்னிட்டு அவரால் வரமுடியவில்லை. தமது தேர்தல் விஷயமாக கவலைப்படவேண்டாமென்றும், பலர் பலவிதமாக பத்திரிகைகளில் எழுதி வருவதை நம்பவேண்டாமென்றும், தாம் வெற்றிபெறுவது நிச்சயமென்றும் அவர் உங்களுக்குத் தெரிவிக்கும்படி என்னிடம் சொன்னார். (பலத்த கரகோஷம்.)

இன்று தொண்டர்களைக்கூட்டி அவர்கள் தேர்தலில் எப்படி நடந்து கொள்வதென்பதுபற்றி அறிவுறுத்துவதே இக்கூட்டத்தின் நோக்கமாகும். ஆனால் இப்பெரிய கூட்டத்தில் அது சாத்தியமல்லவாகையால், தொண்டர்களாகச் சேர விரும்புவோரெல்லாம் ஞாயிற்றுக்கிழமை மாலை தியாகராய மெமோரியல் ஹாலுக்கு வந்தால் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறையையும் இதர விவரங்களையும் தெரிவிப்போம்.

### தேர்தல் பிரசாரப்போக்கு.

தோழர் ராமசாமி முதலியார் தேர்தல் விஷயத்தில் மிக்க ஊக்கமுள்ள ஏராளமான வாலிபர்கள் இங்கே கூடியிருப்பது நல்ல அறிகுறியாகும். தேர்தல் பிரசாரத்தின் போக்கு உங்களுக்கு நன்றாகத் தெரியும். புதிதாக கூறவேண்டியது ஒன்றுமில்லையென்று நினைக்கின்றேன். போட்டி ஏற்பட்டு விட்டாலேயே அபேட்சகர்களும் அவர்களது கோஷ்டியினரும் ஒருவர் மீது மற்றவர் தூஷணையாகப்பேசி வெற்றிபெற தம்மால் இயன்றவரையில் முயற்சி செய்வதென்பது வழக்கமாகவிருக்கிறது. நமது எதிர் கட்சியினர் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றனரென்பது பற்றியும் ஆபாசமான விஷயங்களைப் பறைசாற்றி வருகின்றனரென்பதுபற்றியும் நீங்கள் வருந்தக் கூடாது. தேர்தல் பிரசார முறை அப்படியிருக்கிறது. உண்மையைத் தெரிந்துகொண்டு ஓட்டுப்போட வேண்டுமென்ற நோக்கம் நம் ஜனங்களில் பெரும்பான்மையோருக்கு இல்லை. பெரும்பான்மையோர் எழுதப்படிக்கத்தெரியாதவர்கள். அவர்கள் ஏதாகிலும் விஷயம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் புரோகிதர்கள், வக்கீல்கள் முதலியோர் மூலமே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நமது தேசமக்கள் அறிவாளிகளென்று நாம் பெருமை பாராட்டிக் கொண்ட போதிலும் 100-க்கு 2-விழுக்காடு பேர்களே படித்தவர்களாக விருக்கின்றனர். உயர்ஜாதியினர், பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள் இவர்களது புதல்வர்களே படிக்கின்றனர். விவசாயிகள் முதலிய பெரும்பான்மையோருக்கு எழுத்து வாசனையே இல்லை. இந்நிலைமையில் ஜனங்கள் உண்மையைத்தெரிந்து கொள்வது எப்படி? யாருக்கு அதிகமாக புளுகத்தெரிகிறதோ, யாருக்கு தூஷணம் செய்யத்தைரியமிருக்கிறதோ அவரே தேர்தலில் வெற்றி பெறுவது சகஜமாக விருக்கிறது,

சென்னை மக்களது நிலைமை அப்படி அல்லவென்று நான் கருதுகின்றேன். இந் நகரிலுள்ளவர்கள் படித்தவர்கள்; விஷயம் தெரிந்தவர்கள். ஆனால் இவர்களிடம் பெருங்குறை ஒன்று உண்டு. கிராம வாசிகள், ஆபத்தென்றால் எல்லோரும் ஒன்று கூடி விடுவார்கள்- படித்ததன் பலனாக நகர வாசிகள் அவ்விதம் ஒன்று சேருவதே கிடையாது. தங்களுக்கு அநுகூலமுண்டா வென்பதையே முக்கியமாகக் கவனித்து விட்டு, ஊர் வம்பில் தலையிடக் கூடாதென்று சும்மாயிருந்து விடுவார்கள். சிறு பான்மையோர் தங்கள் சமுதாய நன்மையைப் பொறுத்த விஷயத்தில் சிரத்தைகொண்டு ஒத்துழைக்கிறார்கள். பெரும் பான்மையோர் அவ்விதம் சிரத்தை கொள்வதேயில்லை. இதனால் முடிவில் சுயமரியாதையை இழக்கவும் நேரிடுகிறது. இதனை எதற்காக கூறுகின்றேனென்றால், தோழர் சத்தியமூர்த்தி கோஷ்டியினர் பிராமண வாக்காளர்களது ஆதரவு நிச்சயமென்பதில் முழு நம்பிக்கை கொண்டிருக்கும்போது, பெரும் பான்மையோரான பிராமணரல்லாதார் தங்களிடம் பதின் மடங்கு அதிக ஓட்டுகளிருந்தும், சிரத்தையும், தைரியமும் கொள்ளாமலிருக்கின்றனரென்பது பற்றியே. தேர்தலில் கட்சி குண தோஷங்களைப் பிரசாரஞ் செய்த போதிலும், போட்டியானது சமூக விரோதத்தையும் ஜாதி வித்தியாசத்தையுமே அடிப்படையாகக்கொண்டுநடைபெறுகிறது. இதுவரையில் சமூக உயர்வு, தாழ்வு, அநுகூலம் இவைகளையே குறியாகக் கொண்டே தேர்தல் நடந்து வந்துள்ளது. அவ்வப்போது பெயர்கள் மாறி வந்தபோதிலும், அடிப்படைத் தத்துவம் சம்பந்தமாக வித்தியாசமமே இல்லை. பிராமணர் பிராமணரல்லாதாரை நசுக்கி விட்டு, உத்தியோகம் முதல் எல்லா துறைகளிலும் ஆதிக்கம் பெற தேர்தலை சாதனமாக உபயோகித்து வந்துள்ளனர். வெளிப்படையாக எதையும் சொல்லுவோர் காரியத்தில் கண்ணாக இருப்பதில்லை. பிராமணரோ அப்படியல்ல. அவர்கள் வாய் பேசாமல் காரிய சித்தியிலேயே கருத்துடையவர்களாக விருக்கின்றனர்.

### காங்கிரஸ் பிரசாரப் போக்கு

இந் நகரில் தோழர் சத்தியமூர்த்தி காங்கிரசின் பெயரால் அபேட்சகராக நிற்கின்றார். தோழர் முதலியார் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் அபேட்சகராக நிற்கின்றார். காங்கிரஸ் தேர்தல் பிரசாரம் எப்படி நடந்து வருகிறதென்பதைக் கவனிப்போம். ஜஸ்டிஸ் கட்சி தேசத் துரோகக் கட்சியென்றும், தோழர் ராமசாமி முதலியார் தேசத் துரோகியென்றும், காங்கிரஸ் மகாசபையே ஜனப் பிரதிநிதித்துவம்வாய்ந்த சபையென்றும், தேச மக்களுக்காகப் பாடுபடுகிறதென்றும், ஆகவே காங்கிரஸ் அபேட்சகருக்கு ஓட்டுப் போட வேண்டுமென்றும் பிரசாரம் செய்து வருகின்றனர். காங்கிரஸ் வாதிகள் மட்டுமே தேச பக்தியும், தேசாபிமானமும் உடையவர்களென்றும் கூறி ஓட்டுகேட்கின்றனர்.

### காங்கிரஸ் சாதித்ததென்ன?

காங்கிரஸ் பிரசாரகர்கள் கூறுவது எவ்வளவு தூரம் உண்மையென்பதை நாம் ஆராய்ச்சி செய்வோம். சமீபத்தில் பம்பாயில் காங்கிரஸ் மகாநாடு நடந்ததென்றும், பலத்த விவாதம் நடந்ததென்றும், மகாநாடு வெற்றிகரமாக முடிந்ததென்றும் செய்திகளை நாம் பத்திரிகைகளில் படித்தோம். ஆனால் அம் மகாநாட்டில் என்ன நடந்ததென்பதைச் சுருக்கமாகக் கூற இயலுமாவென்று நான் கேட்கின்றேன். என்ன தீர்மானம் நிறைவேற்றினார்கள்? நாட்டுக்கு அம் மகாநாட்டில் என்ன நன்மை ஏற்பட்டது? ஒருவரை யொருவர் பாராட்டிக்கொண்டார்களே தவிர வேறு நடந்ததென்ன? இரண்டொருவருக்குப் பெரும் புகழ் ஏற்படுமாறு ஏற்பாடு செய்தனர். மற்றவர்கள் காங்கிரஸில் பிரவேசிக்காதபடி பந்தோபஸ்து செய்துகொண்டார்கள். தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் சிலவற்றைத் தேடிக் கொண்டனர். அம் மகாநாட்டில் நடந்ததென்ன வென்றால் மகாத்மா காந்தி காங்கிரஸிலிருந்து விலகியது தான். இதற்காக ஒரு பெரிய மகாநாடு. லட்சக்கணக்கில் செலவு. காங்கிரஸின் யோக்கியதை என்னவென்று காட்டவே நான் இதைக் குறிப்பிடுகின்றேன். இந்நாட்டில் காங்கிரஸ் தான் பிரதானமான சபையென்ற சமாதானம் மட்டும் போதுமா? அதனால் என்ன நன்மை ஏற்பட்டது? அது சாதித்ததென்ன? இவைகளைக் கவனிக்க வேண்டுமல்லவா?

### "எனது அனுபவம்."

நான் காங்கிரசில் சேர்ந்து கண்ட அனுபவங்களையே எடுத்துக்கூறுகின்றேன், காங்கிரசிலிருந்த போது அதன் விதிகளை யெல்லாம் முற்றிலும் அநுசரித்தவன் அப்போதே நாலைந்து தடவை சிறைப்பட்டிருக்கின்றேன். அநுபவப்பட்டு அதன் (காங்கிரஸின்) குணதோஷங்களைச் சொல்ல வந்தவனே தவிர வேறல்ல. சிறைபடும்போது நான் வெறும் ஆளாகவிருக்கவில்லை. அப்பொழுது வியாபாரத்தில் மாத்திரம் நான் ரூ. 800 வருமான வரி செலுத்திக் கொண்டிருந்தவன். இதர வரிகள்பலவும் 3000 ரூபாய் செலுத்தினேன். காங்கிரஸ் வேலைத் திட்டத்தை அனுசரித்தால் தேசத்துக்கு நன்மை ஏற்படுமென நம்பி தொழிலை விட்டேன். கோர்ட்டுகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று வாயினால் மட்டும் பேசி விட்டு நான் சும்மாயிருக்க வில்லை. ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்படுவதையும் லட்சியம் செய்யாமல் நான் கோர்ட்டுகளைப் பகிஷ்கரித்து வந்தேன். நான் ஒரு பத்திரத்தில் ரூபாய் 28000 வசூல்செய்யாமல் விட்ட விஷயம் பழந்தேசபக்தரான தோழர் விஜயராகவாச்சாரியாருக்குத் தெரியும். அவர் தாம் எனது சார்பில் வக்கீலாக ஆஜராகி அப்பணத்தை வசூல் செய்வதாக எனது அநுமதி கேட்டார். அப்பணம் வீணாக விடாமல் வசூல்செய்து காங்கிரஸிற்காகவாவது உபயோகிக்கலாமென்றும் கேட்டார். மேற்கொண்ட கொள்கையைக்கடை

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க,

# பொதுவுடைமைக் கொள்கைமீது யுத்தமா?

## அபிப்பிராய சுதந்திரம் கிடையாதா?

## எது சட்ட விரோதம்?

## இந்திய பொதுவுடைமைச் சங்கமா? பொதுவுடைமைக்கு சார்பான அபிப்பிராயம் கூடவா?

## நிலைமையை பகிரங்கமாக தெளிவு படுத்தவேண்டும்.

1. சட்டம்செய்வதானால் சட்டசபையில் விவர்தம்நடக்கவேண்டும்.

2. நிர்வாக உத்தரவானால் அதற்கு சட்டத்தின் ஆதரவு வேண்டும்.

என்ன செய்வது?

ரகசியமாக ஆங்காங்கு அதிகாரிகளைக்கொண்டு "ஏற்பாடு" செய்துவிடுவது.

சென்னைத் தமிழ்ப் பத்திரிகாசிரியர் சிலருக்கு போலீஸ் கமிஷனரிடமிருந்து ஒரு அழைப்பு.

"முக்கியமான விஷயத்தைப் பற்றி தங்களிடம் பேச வேண்டியிருக்கிறது. எப்பொழுதாவது வந்துபார்க்கவும்."

இது என்ன அழைப்பா, தாக்கீதா? என்ன விஷயம்? ஏதோ பொதுஜன க்ஷேமத்தை உத்தேசித்து பத்திரிகாசிரியரின் யோசனை கமிஷனருக்கு அவசியமாய் விட்டதா?

இல்லை.

"பொதவுடைமைக்கும், அபேதவாதத்துக்கும் ஒரு மயிரிழையளவு தான் வித்தியாசம். ஆகையினால் அபேதவாதத்தைப் பற்றி எழுதும் போது ஜாக்கிரதையாயிருந்தால் உங்களுக்கு க்ஷேமம்" என்கிறாராம் கமிஷனர் பத்திரிகாசிரியர்களிடம்.

இது பயமுறுத்தலா, ஆலோசனையா? என்பது இன்னும் பத்திரிகாசிரியர்களுக்கு விளங்கவில்லை.

பொதுவுடமையை ஏற்படுத்துவதற்கு கிரியாம்சையில் ஏதாவது செய்தால் அதை "அரசருடைய ராஜ்பத்தை அபகரிப்பதற்காக யுத்தம் செய்வதாக" சர்க்கார் கருதுவசர்கள்.

மீரட்சதி வழக்கு ஞாபகம்...!

ஆனாலும் பொதுவுடைமைக்கொள்கை சட்டவிரோதமா? அதிலிருந்து "மயிரிழை" மட்டும் வித்தியாசப்பட்ட அபேதவாதம் சட்டவிரோதமா? சட்டம் தெளிவாக இல்லை.

அபேதவாதத்தின் மயிரிழை போன்ற எல்லையைத்தாண்டிவிடக்கூடாது! அப்படியானால் பத்திரிகாசிரியர் தலையங்கத்தைப் பிரசுரிக்குமுன்பு கமிஷனரிடம் காட்டிக் கொள்வதுதானே நல்லது?

பொதுவுடமையில் "சர்ப்பு"!

பத்திரிகாசிரியர்களுக்குவந்தது தாக்கீதுதானா என்ன என்பது தெரியவில்லை.

ஆனால் ஜில்லாபோர்டு, தாலுக்கா போர்டுகளுக்கு "தாக்கீது" போயிருக்கிறது.

"இந்திய பொதுவுடமைக் கட்சியும் வேறு சில ஸ்தாபனங்களும் சட்ட விரோதமென்று சர்க்கார் அறிவிக்கிறார்கள் ஆகையால்பொதுவுடமைச் சார்பு உள்ளவர்களை போர்டுபள்ளிக கூடங்களில் உபாத்தியாயராக நியமிப்பது விரும்பத் தக்க தல்ல" என்பதுதான் அந்தத் தாக்கீது.

பொதுவுடமைச்சார்பு என்றால் என்ன? அபேதவாதமா? சார்பு என்றால் என்ன அர்த்தம். பொதுவுடமையைப் பற்றி உபாத்தியாயர்கள் தெரிந்துகொள்ளநினைக்கலாமா? சார்புஎன்பதற்கும், பற்றுதல், பக்திஎன்பதற்கும்எத்தனை டிக்கிரி வித்தியாசம்?

இதை யெல்லாம் யார் முடிவு செய்வது?

ஏன் இவ்வாறு பிதிர்களும், விடுகவிளும்போட்டு அப்பாவிகளை துன்பப்படுத்த வேண்டுமென்று ஜில்லா தாலுக்கா போர்டுகளும், பத்திரிகாசிரியர்களும் திகைக்க வேண்டியதுதான்.

"பொதுவுடமை" யென்ற வார்த்தையே இந்நாட்டில் இருக்கக் கூடாதென்றுசர்க்கார் நினைத்தால் ஏன் பகிரங்கமாக உத்தரவு போடக் கூடாது? (தினமணி)

---

# பொதுவுடமை நல்லதா?

## சர்க்கார் அறிக்கை வியாசப் போட்டி.

### யார் வேண்டுமானலும் கலந்து கொள்ளலாம்.

ஒரு அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:—

பொதுவாக நாகரிகசமூகத்தினரும், சிறப்பாக தற்போதைய இந்தியாவும் கவனிக்கவேண்டிய பிரச்னைகளைப்பற்றி ஜாக்கிரதையாகப்படிக்கவும், சரியான முறையில் யோசிக்கவும், உற்சாக மூட்டுவதற்காக இந்திய சர்க்கார் ஒரு வியாஸப் போட்டி நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ளவர்கள் யார்வேண்டுமானாலும் நிறம், வகுப்பு,ஜாதி அந்தஸ்து, தொழில் போன்ற வித்தியாசங்கள் இல்லாமல்இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

இந்தப் போட்டியைப்பின்கண்டவர்கள் நிர்வகிப்பார்கள்:—

தோழர். ஏ. எச். லோயர்டு, ஐ. ஸி. எஸ். (டில்லி உதவி கமிஷனர்) தலைவர்; தோழர் ஐ. எம். ஸ்டீபன்ஸ், (சர்க்கார் விளம்பர இலாக்காடைரெக்டர்) ;தோழர் யூ. என். ஸென் (அ. பிரஸ். புதுடில்லி); தோழர்ஜே. ஸி. சாட்டர் ஜீ, (கல்வி சூபிரெண்டெண்டு) தோழர்ஸர்தார் பகதூர் ஸர்தார் ஸபாசிங் (புதிய டில்லி) ராவ்பகதூர்டாக்டர் ஹரிராம்; (கௌரவ மாஜிஸ்டிரேட்) டில்லி; கான் பகதூர் ஹாஜி முகமத் யூசுப், தோழர்ராய் பகதூர்என். ஆர். ஸென், டில்லி ஸர்வ கலாசாலை ரிஜிஸ்டிரார்; எஸ். என். ஏ. ஜாப்ரி. உதவிகாரியதரிசி விளம்பர இலாக்கா.

ஆங்கிலம், உருது, ஹிந்தி, இந்தமூன்று பாஷைகளில் எதில் வேண்டுமானாலும் கீழ்கண்ட விஷயங்களில்ஒன்றைப்பற்றி வியாஸத்தை எழுதலாம்.

வியாஸங்கள்.

(1) பொதுவுடமை இந்தியாவின் தன்மைக்கு இயற்கையானதா?

(2) மதம் முதலாளித்துவத்துக்கு விரோதமா?

(3) பொருளாதார சமத்வம் எப்பொழுதேனும் சத்தியமா?

(4) ரஷ்யாவில் ஸோவியத் ஆட்சியின் பொருளாதாரத் தோல்வி.

(5) ஸோவியத் ஆட்சி அந்நாட்டிலுள்ள முஸ்லிம்களை எப்படி பாதித்திருக்கிறது?

(6) பொதுவுடமையினால்இந்தியாவுக்கு ஏதாவது நிரந்தரமான நன்மை ஏற்படக் கூடுமா?

(7) தொழிலாளர் நல்ல தொழிற் சங்கங்களின் மூலம் உய்ய வேண்டுமேஒழிய, பொதுவுடமையினால் அல்ல?

(8) இந்தியாவுக்கும், குறிப்பாக வங்காளத்துக்கும் பயங்கர இயக்கத்தினால் ஏற்பட்ட கெடுதல்கள்என்ன?

(9) பயங்கர இயக்கத்தினால் ஏதாவது அதிகமாகச்சாதிக்க முடிந்தது என்று சரித்திரம் கூறுகிறதா ஆகியஇந்த விஷயங்களைப் பற்றி?

பரிசுகள் விவரம்.

ஆங்கில வியாஸத்துக்கு.

ரூ. 200

உருது ஹிந்தி பாஷையில் வியாஸம் ஒவ்வொன்றுக்கும்

ரூ. 100

ஜட்ஜுகள்.

ஆங்கிலம்:—தோழர் ஐ.எம்.ஸ்டீபன்ஸ்.

ஹிந்தி:— மகா மகோபாத்தியாய பண்டித ஹரிநாராயண சாஸ்திரி(டில்லி ஸர்வகலாசாலை)

உருது:-இஷ்பாக்ஹுசேன் குரைஷிஎம். ஏ. (டில்லி சர்வகலாசாலை).

இந்தப் போட்டி விஷயமாய் கமிட்டியாரின் முடிவே இறுதியானது. பரிசுகள் கொடுக்கும் விஷயமாய் கடிதப் போக்குவரத்துகள் கவனிக்கப்படமாட்டா. பரிசுத் தொகைக்குமேல் வேறு தொகை கொடுக்காமல் வியாஸங்களை முழுமையுமோ, அல்லது சில பாகங்களோ பிரிசுரிக்க நிர்வாகஸ்தர்களுக்கு உரிமையுண்டு.

வியாசங்க ளெல்லாம் காகிதத்தில் ஒரு பக்கத்தில் தான் எழுதப்படவேண்டும்.

"டெப்டிடைரக்டர் ஆப்பப்ளிக் இன்பர்மேஷன், இம்பீரியல் ஸெ

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

# பகுத்தறிவும்—மூட நம்பிக்கையும்.

## மனிதனின் பகுத்தறிவு ஜோதியை மூடிக்கொண்டிருப்பது மூடநம்பிக்கை யென்னும் கார்மேகம்.

(கொளும்பு தோழர் I. M. இப்றுஹீம்)

இப்பரந்த உலகில் வாழும் மனித சமூகத்தில் பகுத்தறிவிற்குப் பொருத்தமற்ற—இயற்கைக்கு முரணான எண்ணிக்கையற்ற மூட நம்பிக்கைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களும் புகுந்து கொண்டு குறுகிய மக்களது வாழ்நாட்களை யெல்லாம் பல பங்குகள் போட்டுக்கொள்கின்றன.

### மூட நம்பிக்கைகள்.

“பேய், பிசாசு, ஜின், சைத்தான், இப்லீஸ், தேவதூதர், தேவகுமாரன், அவதாரம், மகாத்மா, நபி, ஜிப்ரீல், எமென், இஸ்ராயில், மலக்கு, அவ்லியா, அம்பியா, காளி, கருப்பாயி, நொண்டி, சண்டி, சாமுண்டி, சிவன், விஷ்ணு, பரமசிவன், கற்பு, தலைவிதி, நல்லதிர்ஷ்டம், கெட்டதிர்ஷ்டம், சகுனம், ரேகைசாஸ்திரம், ஜோசியம், பில்லி, சூனியம், மந்திரம், ஆத்துமா, இறுதிதீர்ப்புநாள், மறுஉலகம், மறுஜன்மம், நிர்வாணம், சுவர்க்கம், நரகம், பூஜை, பிரார்த்தனை, தொழுகை, நோன்பு, விரதம், கத்தம், பாதிஹா, துவா, பாவமன்னிப்பு, பிள்ளைவரம், தவ்பா, கூடு, கொடி, பஞ்சா, தேர், திருவிழா, பிங்கம், பெரஹறா, ஹஜ்யாத்திரை, ரோமாபுரி யாத்திரை, “காசியாத்திரை”————என்னும் இத்தியாதி மூடநம்பிக்கைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களும் மக்களிடத்தில் புகுந்து கொண்டு—அவர்களின் பகுத்தறிவு ஜோதியை மூடிக்கொண்டு மக்கள் சமூகத்தையே பாழ்படுத்தி வேட்டையாடி வருகிறது.

இம்மூட நம்பிக்கைகளில் நாம் இங்கு எழுதிக் காட்டியது மிக மிகச் சொற்பம். என்னால் எழுத முடியாத—என் சைக்லோபீடியா ஆசிரியர்களைக் கொண்டும் எழுதி முடிக்க இயலாத எத்தனையோ கோடானுகோடி மூடநம்பிக்கைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களும் உலக மக்களிடததில் இருந்து வருகிறது; ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு ஜாதிக்கும், ஒவ்வொரு மதஸ்தருக்கும் வெவ்வேறு விதமான மூடநம்பிக்கைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களும இருந்து வருகிறது. இப்பரந்த உலகிலுள்ள ஜனத்தொகையை அறிஞர்கள் 200 கோடியென்று எளிதாயக் கணக்கெடுத்து விட்டார்கள் ஆனால் இந்த 200 கோடி மக்களிடத்திலுமிருந்து வருகிற—புதிது புதிதாய் முளைத்து வருகிற மூடநம்பிக்கைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களும் எல்லாம் எத்தனை என்று கணக்கெடுத்துவிட எந்த நிபுணராலும் இதுவரையிலும் முடியாமல் போய்விட்டது. இத்தனை மூடநம்பிக்கைகளையும், புதிது புதிதாய் முளைத்துக் கொண்டிருக்கிற மூடநம்பிக்கைகளையும் தேடிப்பிடித்து ஒவ்வொன்றாய்க் கண்டித்து மக்களை அவைகளை விட்டும் விடுவித்து திருத்த முடியாது. ஆனால் இவைகள் எல்லாவற்றையும் திருத்தக்கூடிய—சத்தியத்தைவிளக்கிக்காட்டக் கூடிய பொதுவான ஒரு மார்க்கம் உண்டு. அதுதான் பகுத்தறிவு மார்க்கம்—விஞ்ஞான மார்க்கம் என்று சொல்வது. இம்மார்க்கம்தான் மூடநம்பிக்கைகளிலும், குருட்டுப்பழக்க வழக்கங்களிலும் மூழ்கிக் கிடக்கும் மக்களை அவைகளை விட்டும் விடுவித்து சத்தியமான “நம்பிக்கை”யில் கொண்டு சேர்க்கும் மார்க்கமாகும்.

### மூடநம்பிக்கைகளில் முக்கியமான கடவுள் நம்பிக்கையின் பெயரால் நடக்கும் விபரீதங்கள்.

இத்தியாதி எண்ணிக்கையற்ற மூடநம்பிக்கைகளில் முக்கியமானது வாழையடி வாழையாகவையகத்தோர் கற்பித்துக்கொண்ட தெய்வ நம்பிக்கை என்னும் பொல்லாத மயக்கம் ஒன்று மக்களை குதூகலம் என்னும் கொண்டாட்டத்தை நெருங்க விடாமலும், சந்தோஷம் என்னும் மகிழ்ச்சிததும்பும் முகத் தோற்றங்களை காணவிடாமலும் துக்கம் என்னும் பயங்கரத்தையும், பல யீனத்தையும் உண்டுபண்ணும் கரியமாலையை சதா கழுத்தில் அணியும்படிச்செய்து மக்களைப் படுத்தும்பாடு சொல்லத்தரமன்று. இக்கொடிய துக்கம் பிடித்தகடவுள் நம்பிக்கை உண்மையைக் கண்டுபிடிப்பதற்குப் பிரயத்தனப்பட்ட அறிஞர்களுக்கு இடமளிக்காமல் அவ்வறிஞர்களையெல்லாம் கழுமரத்திற்கு இரையாக்கி வந்திருக்கிறது. இத்தகைய தெய்வநம்பிக்கையின் பெயரால் இப்பரந்த உலகில் நிகழ்ந்த கொடுமைகள் எத்தனை! விபரீதங்கள் எத்தனை!! அற்பநாள் பலவித துன்பங்களையும், தொல்லைகளையும் அனுபவித்துவிட்டு வந்த விடமும், போனவிடமும் தெரியாமல் போகும் மனிதன் கடவுள் நம்பிக்கையின் பெயரால் செய்யும் கோலங்களும், போடும் சண்டையும், தூற்றும் ஏசல் மாலையும், சிந்தும் இரத்தமும், பிரார்த்திக்கும் பிரார்த்தனையும் நடத்தும் சடங்குகளும் போகும்திருயாத்திரைகளும், உருட்டும் ஜெபமாலையும், அள்ளியிறைக்கும் செல்வமும், கட்டும் ஆலயங்களும் கோடானகோடி. இந்த விபரீதம் ஒருபுறமிருக்க இன்னொருபுறம் இக்கடவுள் நம்பிக்கையின் பெயரால் தெருத் தெருவாய் மெலிந்த கரங்களை பிச்சைக்கு நீட்டிக்கொண்டு திரியும் ஏழைகளின் பரிதாபமும், ஏழைகளின் செல்வத்தை அபகரித்து வைத்துக்கொண்டு கடவுளின் பெயரால் பிச்சைகொடுக்கும் முதலாளிகளின் அகம்பாவமும், செல்வத்தை யுண்டுபண்ணும் உழைப்பாளிகள் செல்வத்தை யிழந்து துன்பத்தை அனுபவிப்பதும், மனித சமூகத்திற்கு பொதுவாக இருக்கவேண்டிய செல்வத்தை அற்பப்பிராணிகளாகிய கொடிய செல்வம் தாங்கிப் பூதங்கள் பாதாள நகரங்களைப் பாதிகாது. கடவுளின் பெயரால் அபகரித்துவைத்துக் கொண்டு-தலைமுறை தலைமுறையாக மேலான சோம்பேறி வாழ்க்கை வாழ்ந்து கொண்டு அநந்த கோடி மக்களை அலறச் செய்திருக்கும் அக்கிரமக்காட்சியையும் பார்க்கும்போது இக் கடவுள் நம்பிக்கை, எல்லாம் உள்ள இந்த அழகிய உலகை “நரகலோக”மாகச் செய்து விட்டு நாம் ஒருவரும் பார்த்திராத கற்பனையுலகை இன்பம் அனுபவிக்கும் “சுவர்க்க லோக”மாகச் செய்திருக்கிறதேயன்றி வேறு நன்மை எதையாவது இககடவுள் நம்பிக்கை சாதித்து விடவில்லை. கடவுள் ஒரு மூடநம்பிக்கை என்பதற்கு வேறுஎன்ன சாக்ஷி வேண்டும்?

நான் ஏன் கடவுள் நம்பிக்கையை இவ்வளவு முக்கிய மாகக்குறை கூறுகிறேன் என்பதை பகுத்தறிவுக்கண் கொண்டு துவேஷ புத்தியின்றிக் கவனியுங்கள்.

### “சர்வம் கடவுள் மயம்”

எடுத்ததற் கெல்லாம் கடவுள்! வைத்ததற் கெல்லாம் கடவுள்; தொட்டதற் கெல்லாம் கடவுள்! வந்தாலும்கடவுள்! போனாலும் கடவுள்; வெற்றியடைந்தாலும் கடவுள்! தோல்வியடைந்தாலும் கடவுள்! நயம் வந்தாலும் கடவுள்! நஷ்டம் வந்தாலும் கடவுள்! மோட்டாருக்கிரையானாலும் கடவுள்! ரயிலுக்கிரையானாலும்கடவுள்! மிருகத்தால்கிழித்தெறியப்பட்டாலும் கடவுள்! பாம்பு கடித்தாலும் கடவுள்! கானில் விழுந்து மண்டையுடைந்தாலும் கடவுள்! கிடங்கில் விழுந்து துண்டு துண்டாய்ப் போனாலும் கடவுள்! கடலில் மூழ்கி இறந்தாலும் கடவுள்! இடி விழுந்து அடி மாண்டுபோனாலும் கடவுள்! பிரளயம் வந்து எல்லோரையும் அழித்து நாசப்படுத்தினாலும் கடவுள்! சண்டமாருதம் வந்து திணறும்படி செய்தாலும் கடவுள்!

பூகம்பம் “பேய்போல்” வந்து எல்லோரையும் மண்ணுக்கிரையாக்கினாலும் கடவுள்! எரிமலைதோன்றி அழித்து நாசப்படுத்தினாலும் கடவுள்! கொள்ளை நோய் வந்து கொடிய துன்பத்திற்குட்படுத்தினாலும் கடவுள்! பஞ்சம் தோன்றி பரிதவிக்கச் செய்தாலும் கடவுள்! கண்ணையிழந்து கபோதியாகி கண்ட கண்டவிடங்களில் முட்டிக்கொண்டு அவதிப் பட்டாலும் கடவுள்! கொலை, களவு, விபச்சாரம், தற்கொலை செய்கிறவர்களுக்கும் கடவுள்! பொய், புரட்டு, சூது, வாது, வஞ்சகம், பொறாமை, சுயநலம் எல்லாவற்றிற்கும் கடவுள்! சிறைச்சாலையில் அவதிப்படுகிறவனுக்கும் கடவுள்! கழுமரத்தில் கண்ணீர் சொரிந்து கொண்டு உயிர் துறப்பவனுக்கும் கடவுள்! இரவு பகலாக ஓய்வின்றி மாடுபோல் உழைக்கும் அடிமைக்கும் கடவுள்!

சும்மாயிருந்து கொண்டு உழைப்பாளிகளை வஞ்சித்து சுகமனுபவிக்கும்முதலாளிக்கும்கடவுள்! உணவில்லாமல் தெருத்தெருவாய் அலைந்து திரிபவனுக்கும் கடவுள்! கோடிக்கணக்கான மக்களின் உயிரை வாங்கும் கொடிய யுத்தங்களுக்கும் கடவுள்! அரசனின் தலையிலிருக்கும் நவரத்தினங்கள் பதித்த கிரீடத்திற்கும் கடவுள்! அடிமையின் காலில் பிணைத்திருக்கும் அடிமை விலங்கிற்கும் கடவுள்! கடவுள்! கடவுள்!! கடவுள்!!!

இவைகள் எல்லாவற்றிலும் கடவுள் மயம்தான்! இவைகள் எல்லாவற்றிலும் அல்லாஹ்வின் அளவிலா அன்பும்—நிகரிலாக் கருணையும்—எல்லையற்ற ஞானமும்—நேரான நீதியும் நிறைந்து வழிந்தோடத்தான் இப்படி செய்கிறது போலும்! இந்த விபரீதங்களைப் பார்த்து எல்லா மதங்களும் சொல்லும் ஆண்டவனோ, கடவுளோஒருவனிருக்க முடியுமா? பக்தர்கள் இடைவிடாமல் தொழுது வரும் அளவிலா அருட்சோதிக் கடவுளிருந்தால் இந்தக் கொடுமைகள் நிகழ முடியாது.

பிரபஞ்சத்தில் நிகழ்ந்து வரும்கொடிய நிகழ்ச்சி யெல்லாம் பகுத்தறிவில்லாத—தன்னுணர்வில்லாத இயற்கையின் தன்மையாகும். மற்றைய பொருளாதாரக் கொடுமையெல்லாம் முதலாளித்துவத்தின் தன்மையாகும். நாம் ஆலயம் கட்டி வணங்குவதாலும், பிரார்த்திப்பதாலும்பலியிடுவதாலும், விரதம் அனுஷ்டிப்பதாலும, ஜெபமாலை உருட்டுவதாலும் கொடிய இயற்கை நிகழ்ச்சிகளை

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

# பாதாளலோக சிருஷ்டி

## பிரிட்டிஷாரின் முயற்சி.

### வானளாவிய வீடுகள்.

சுமார் 6000 வருடங்களுக்கு முன்னரேயே மனிதர்கள் முதன் முதலாக உன்னதமான கட்டிடங்களை அமைக்க ஆர்வம் கொண்டனர். எகிப்தியர்கள், ரோமர்கள் முதலியோர் சுமார் 500 அடி உயரமுள்ள ஸ்தூபிகளையும், கோபுரங்களையும் அமைத்தனர். அவர்கள் அமைத்த இச் சிங்காரமான கட்டிடங்களின் சின்னங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றன. கடந்த நூற்றாண்டில் ஐரோப்பியச் சிற்பிகள் சுமார் 600 அடி உயரமுள்ள மணிக்கூண்டுகளையும், தேவாலயங்களையும் அமைத்தனர். அவர்களுடைய சிற்பத் திறமையை உலகம் முழுவதும் கொண்டாடத் தொடங்கியது. சமீபகாலத்தில் அமெரிக்கர்கள் சிற்பத் திறமையில் ஐரோப்பியர்களை வென்று விட்டனர். அவர்கள் தெரு மட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான அடி உயரமுள்ள மாளிகைகளையும், தொழிற்சாலைகளையும் அமைத்துப் புகழ் ஈட்டிக்கொண்டனர். உயரமாகக் கட்டிடங்கள் அமைப்பதால் ஜன நெருக்கம் அதிகமாக ஏற்படாதென்று அமெரிக்கர்கள் நம்பினர். தற்பொழுது அமெரிக்காவில் முக்கியமான நகரங்களனைத்திலும் வானளாவிய கட்டிடங்கள் நிறைந்திருக்கின்றன. பிரஸ்தாபக் கட்டிடங்களை அமெரிக்கர்கள் சுலபமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றி விடுகின்றனர். ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் கட்டிடங்களை அமைப்பதற்கு அதிகப் பணச் செலவாகும். கட்டிடங்களை உன்னதமாக அமைப்பதால் இடத்திற்குப் பணம் செலுத்த வேண்டியதில்லை. நியூயார்க் நகரத்தில் பெரும் பான்மையான கட்டிடங்கள் மிகவும் உயரமாக இருக்கின்றன. உன்னதமான கட்டிடங்களை அமைப்பதால் ஆபத்துகள் ஏற்படுவது நிச்சயம். தீ விபத்து நீங்கலாக வேறு விபத்துகளும் ஏற்படும். மேலே போகப்போகக் காற்றின் அழுத்தும் சக்தி அதிகரிக்கின்றது. சிகரத்திலிருக்கும் மாடி காற்றின் வேகத்திற்கு ஆற்றாது குலுங்கத் தொடங்கும். சில சில சமயங்களில் சிகரத்திலுள்ள மாடி கீழே விழுந்து ஆயிரக்கணக்கான ஜனங்களை மாய்த்து விடுமென்பதிற் சந்தேகமில்லை. பூகம்பத்திற்கு உயரமான கட்டிடங்கள் நல்விருந்தாகின்றன. சாதாரணமான கட்டிடங்களே பூகம்பத்தின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் தரை மட்டமாகி விடுகின்றன. உயரமான கட்டிடங்கள், பூகம்பம் ஏற்பட்டால் இருந்த இடம் தெரியாமல் பூமியில் புதைந்துவிடும். ஜப்பானில் அடிக்கடி பூகம்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய பூகம்பங்கள் அமெரிக்காவில் ஏற்படுமாயின் நியூயார்க் நகரம் அறவே அழிந்துவிடும். உன்னதமான கட்டிடங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை லண்டன் நகரசபை அதிகாரிகள் நன்கு அறிந்திருக்கின்றனர். இதனாலேயே அவர்கள் லண்டன் நகரத்தில் எவரும் உன்னதமான கட்டிடங்களை அமைக்கக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

### பாதாள ரெயில்வே

நகரங்களின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்குப்பதிலாக பூமிக்குக்கீழ் கட்டிடங்களை அமைத்துக் கொள்ளலாம். இத்தகையநிலைமைபிரிட்டனில் விரைவில்ஏற்படப்போகிறது. ஏற்கனவே பிரிட்டிஷ் ரெயில்வே அதிகாரிகள் ஜன நெருக்கமுள்ள லண்டன் தெருக்களின் வழியாக ரயில் பாதையை அமைக்க முடியாதென்பதை அறிந்து, பூமிக்குக் கீழ் ரயில் ஸ்டேஷன்களையும் ரயில் மார்க்கத்தையும் அமைத்திருக்கின்றனர். லண்டன் நகரத்தின் அநேக ஜன நெருக்கமுள்ள வீதிகளுக்கு அடியில் எப்பொழுதும ரயில் வண்டிகள் சென்றவண்ணமாக இருக்கின்றன. லட்சக்கணக்கான ஜனங்கள் பாதாள ரயிலில் பயணம் செய்கின்றனர். பாதாள ரயில்வே மார்க்கத்தில் எப்பொழுதும் மின்சார விளக்குகள் ஜோதி மயமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. கைகாட்டிகள், மாறுதண்டவாளங்கள் முதலியவை பூமிக்குக் கீழேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

### பூமிக்குக் கீழ் நகரங்கள்.

பாதாள ரெயில்வே மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருவதால் பிரிட்டிஷ் சிற்ப சாஸ்திரிகள் பூமிக்குக் கீழ் வீடுகள், காரியாலயங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றைத்தகுந்த தற்பாதுகாப்புகளுடன் அமைத்துக் கொள்ளலாமென்று ஆலோசனை கூறியிருக்கின்றனர். பூமி மட்டத்திலிருந்து சுமார் 100 அடிக்குக்கீழ் வீடுகள், கடைகள் தொழிற்சாலைகள், கல்லூரிகள், தேவாலயங்கள் முதலியவை அமைக்கப்படும். மழை, வெப்பம், பனி சூறாவளி முதலிய கொடிய பருவங்கள் பாதாளநகரங்களைப் பாதிக்காது. பாதாள நகரங்களில் எப்பொழுதும் மின்சார விளக்குகளும், மின்சார விசிறிகளும் வேலைசெய்து கொண்டிருக்கும். அங்கு ரப்பர் ரோட்டுகள் அமைக்கப்படும். மின்சாரசக்தியில்ஓடக்கூடியவாகனங்களேபாதாள நகரங்களில் உபயோகிக்கப்படும். ஆகவே புகை, அக்கினி முதலிய வற்றின் உதவி பாதாள நகரவாசிகளுக்கு வேண்டியதில்லை. பூமியில் மழை பெய்தாலும், புயல்வீசினாலும்பாதாள மக்கள் கவலைப்படவேண்டியதில்லை. அவர்களுக்கு இன்றியமையாதவசதிகளைச் செய்து கொள்ளலாம். பூங்காவனங்கள், குடி தண்ணீர்க்குழாய்கள் முதலியவற்றை அவர்கள் தங்களுடைய பாதாள நகரங்களிலேயே அமைத்துக்கொள்ளலாம். எதிரிகள் வானத்திலிருந்து குண்டு மாரிபொழிந்து விட முடியாது. பூகம்பங்கள் ஏற்படின் பாதாள நகரமக்களனைவரும் அழிந்துவிடுவார்கள். அந்நகர வாசிகளைக் காப்பாற்றுவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாலும் முடியாது. பூகம்பம் ஏற்படின் பாதாள நகர வாசிகளை எவ்வாறு காப்பாற்றுவதென்பது பற்றியே தற்பொழுது பிரிட்டிஷ் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

வீ. கே

---

## நாகம்மாள் ஞாபகார்த்த புட்பால் கிளப்.

### சேலம் ஒய். எம். சி. ஏ, டோர்னமெண்ட்.

இம்மாத இறுதிக்குள் சேலத்தில் நடைபெறப்போகும். புட்பால் டோர்னமெண்டிற்கு ஜோலார்ப்பேட்டை நாகம்மாள் ஞாபகார்த்த புட்பால் கிளப்பினர் 2 டீம்கள் A&B. சேர்ந்திருக்கின்றனர்.

---

## காந்தியார் ராஜினாமா.

“நான் காங்கிரஸ் அங்கத்தினர் பதவியிலிருந்து நீங்கி விட்டதால் எனது பெயரை காங்கிரஸ் அங்கத்தினர் ஜாபிதாவிலிருந்து விலக்கிவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்”

என்று கூர்ஜ்ஜர (குஜராத்து) மாகாணக்காங்கிரஸ் கமிட்டி காரியதரிசிக்குத் தோழர் காந்தியார் ராஜினாமாக் கடிதம் எழுதி இருக்கிறார்.

---

## பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்.

### டாப்பாரப்பட்டி.

7-11-34ந் தேதி பகல் 2 மணிக்கு இவ்வூர் பஞ்சாயத்து போர்டு ஆபீசில் டெம்பரரி பிரசிடெண்டு தோழர் எச். இராமசாமி செட்டியார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தோழர் எம். ஏ. கோவிந்தசாமி முதலியாரைப் பிரசிடெண்டாக இருக்கவேண்டுமென தோழர் கே. கோபாலகிருஷ்ணராவ் பிரரேபிக்க தோழர் பி. ஆர். சுப்பு செட்டியார் ஆமோதித்தார். எல்லா மெம்பர்களாலும் ஏகமனதுடன் ஷியாரே பிரசிடெண்டாக இருக்கவேண்டுமாகத் தீர்மானிக்கப்பட்டது.

பின்பு தலைவர் அவர்கள் தலைமையில் வைஸ் பிரசிடெண்டு தேர்தல் நடைபெற்றது. தோழர் எச். இராமசாமி செட்டியாரை வைஸ் பிரசிடெண்டாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### ஆண்டிப்பட்டி.

இம்மாதம் 8ந் தேதி பகல் 1 மணிக்குத் தற்காலிகத் தலைவர் தோழர் எஸ் பழனிச்சாமி நாயக்கர் தலைமையின்கீழ் மாஜி பிரசிடெண்டு தோழர் ஏ. பி. எஸ். சண்முக நாடாரையே மறுபடியும் பிரசிடெண்டாக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தனர்.

### ஓமலூர்.

மேற்படி பஞ்சாயத்து போர்டின் பிரசிடெண்டு எலக்‌ஷன்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

# முனிசிபல் சேர்மன் தேர்தல்கள்.

## சேலத்தில் காங்கிரஸ் தோல்வி.

### தோழர் அய்யாசாமி வெற்றி.

### சேலம்.

சேலம் முனிசிபாலிட்டியின் சேர்மன் தேர்தல் 9—11—34ந் தேதி நடைபெற்றது. இந்த முனிசிபாலிட்டியில் மொத்த அங்கத்தினர்கள் 34 பேர்களில் 33 கௌன்சிலர்கள் விஜயம் செய்திருந்தார்கள். சேர்மன்பதவிக்குதோழர் என். ஏ. அய்யாசாமி எம்.ஏ. பி.எல். அவர்களும், காங்கிரஸ் சார்பாக தோழர் வெங்கிடப்ப செட்டியாரும் நின்றார்கள்.

தோழர் எஸ். ஏ. அய்யாசாமி அவர்களை முனிசிபல் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென ஜமீன்தார் தோழர் சின்னத்தம்பி பிள்ளை பிரரேபித்தார். இத்தீர்மானத்தை தோழர்கள்மாதவியம்மாள் அவர்களும், நரசிம்ம செட்டியாரும் ஆமோதித்தார்கள்.

தோழர் வெங்கிடப்ப செட்டியார் அவர்களைச் சேர்மனாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தோழர் சடகோப முதலியார் பிரரேபித்தார். தோழர் முருகேச செட்டியார் ஆமோதித்தார்.

இவ்விருதீர்மானங்களையும்ஓட்டுக்கு விட்டதில் தோழர் அய்யாசாமி அவர்களையே தேர்ந்தெடுப்பதென்ற தீர்மானத்திற்குச் சாதகமாக 25 ஓட்டுகள் கிடைத்தன. காங்கிரஸ் அபேட்சகரான தோழர் வெங்கிடப்ப செட்டியாருக்கு 8 ஓட்டுகள்தான் கிடைத்தது. எனவே பலத்த ஆரவாரங்களுக்கிடையே அதிக ஓட்டுகளால் தோழர் அய்யாசாமி அவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் அபேட்சகராகநின்ற தோழர் வெங்கிடப்ப செட்டியார் வெற்றி பெற வேண்டுமென்று தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் வீடு வீடாகச் சென்று ஓட்டு சேகரித்தார். ஆனாலும் ஒன்றும் பயன்படாமல் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியுற்றார்.

(சேலம் நிருபர்)

### பாளையங்கோட்டை.

பாளையங்கோட்டை முனிசிபல் சேர்மன் தேர்தல் 9-11-34ந் தேதி நடைபெற்றது சேர்மனுக்காகத் தோழர் மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்கள் பெயரையும், தோழர் டானியல் தாமஸ் எம். எல். சி. அவர்களின் பெயரையும் பிரரேபித்தார்கள். தோழர் டானியல் தாமஸ் அவர்களுக்கு 18 ஓட்டுகளும், தோழர் குமாரசாமி முதலியாருக்கு 12 ஓட்டுகளும் கிடைத்தது. தோழர் டானியல் தாமஸ் 6 ஓட்டுகள் அதிகமாகப் பெற்றதால் அவரே முனிசிபல் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### தூத்துக்குடி.

தூத்துக்குடி முனிசிபல் சேர்மன் தேர்தல் 9-11-34ந் தேதி நடைபெற்றது. சேர்மனுக்காகத்தோழர்கள் ரோச் விக்டோரியா அவர்களும், எ. எம். எம். சின்னமணி நாடார் அவர்களும் நின்றார்கள். தோழர் ரோச் விக்டோரியா அவர்களுக்கு 15 ஓட்டுகளும்தோழர் சின்னமணி நாடார் அவர்களுக்கு 14 ஓட்டுகளும் கிடைத்தது. ஒரு ஓட்டு அதிகமாகக் கிடைத்த தோழர் ரோச்விக்டோரியா அவர்களே சேர்மனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று மாலையில் வைஸ் சேர்மன் தேர்தல் நடைபெற்றது அதில் தோழர் எ. வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களே ஏகமானதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### திருநெல்வேலி.

இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 9-11-34ந் தேதி நடைபெற்றது. சேர்மன் பதவிக்கு தோழர் மேடைத் தளவாய் ரங்கநாத முதலியார் எம் எல். சி. அவர்களும், வக்கீல் எம். நெல்லையப்ப பிள்ளை அவர்களும் நின்றார்கள். தோழர் ரங்கநாத முதலியாருக்கு 17 ஓட்டுகளும் தோழர் நெல்லையப்பபிள்ளைக்கு 10 ஓட்டுகளும் கிடைத்தது. அதிக ஓட்டுகள் பெற்ற தோழர் ரங்கநாதமுதலியார் அவர்களே சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### கோயமுத்தூர்.

கோயமுத்தூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 12-11-34ந் தேதி நடைபெறும். பழைய சேர்மன் திவான்பகதூர் சி. எஸ். ரத்தின சபாபதி முதலியார் அவர்களே மீண்டும் சேர்மனாகவும், தோழர் பொன்னைய கவுண்டர் அவர்கள் வைஸ் சேர்மனாகவும் வரக்கூடும் எனத்தெரிகிறது.

# 20 லட்சம் நன்கொடை

## செய்திக்கு மறுப்பு

### தோழர் காந்தி வேண்டுகோள்.

மகாத்மாகாந்தி பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:— "டில்லி வாசியான கோடீஸ்வரர் ஒருவர் இந்திய கிராம கைத்தொழில் சங்கத்திற்காக என்னிடம் ரூ 20 லட்சம் கொடுத்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி பிரசுரமாயிருப்பதை நான் பார்த்தேன். இந்த வதந்திகள் முற்றிலும்ஆதாரமற்றவையாகும் எனது அநுமதியின் பேரில் வெளிவரும் செய்திகளைத் தவிர மற்றபடி எனது நடவடிக்கையைப்பற்றியோ, அல்லது எனது நோக்கத்தைப்பற்றியோ வெளியாகும் செய்திகளை நம்ப வேண்டாமென்று நான் பொது ஜனங்களுக்கு அறிவுறுத்துகின்றேன். கிராம கைத்தொழில் சங்கத்திற்காக மாதம் 2500 ரூபாய் கொடுப்பதாக ஒருவர் வாக்களித்துள்ளார்; ஏற்கனவேயே ரொக்கப்பணம் 500 ரூபாய் கிடைத்துள்ளது. இதுவே உண்மையாகும். சங்கத்திற்கு நிதி தேவையாக விருந்த போதிலும் தொண்டர்களே மிக்க அவசியமாகும். தொண்டர்கள் போதுமான அளவு சேருவார்களேயானால் நிதி வசூலாகிவிடும். ஆகவே, இச்சங்கத்திற்காக வேலை செய்ய விரும்புவோர் தங்களது பெயர்களை அனுப்பும்படி நான் அழைக்கின்றேன். கிராம க்ஷேமாபி விருத்தியில் கவனம் செலுத்தி உதவி செய்ய விரும்புவோரும் வெளித்தோற்றத்தில் ரசமற்றதாக விருக்கும் கிராம வேலையில் சிரத்தை யுடையவர்களுமே முன் வர வேண்டும்.

### வேலை பாகுபாடு

அவ்வேலை நான்கு விதமாயிருக்கும்:

1. ஆதரவற்று அழிந்துபோகக்கூடிய நிலைமையிலிருக்கும் கைத்தொழில்களை ஆதரித்து அபிவிருத்தி செய்வது.
2. அந்த கைத்தொழில் சாமான்களை விற்பனை செய்வது.
3. புதுப்பிக்க வேண்டியதும் ஆதரவளிக்க வேண்டுவதுமான கிராம கைத்தொழில்களின் நிலைமையைபரிசீலனை செய்து விவரங்களைச் சேகரித்தல்.
4. கிராம வாசிகளின் சுகாதாரம், தேக ஆரோக்கியம் இவைகளைக்கவனிப்பது.

கிராம கைத்தொழில் சங்கம் இன்னும் வேலையை ஆரம்பிக்காத போதிலும், வேலைத்திட்டத்தை இன்னும் தயாரித்து முடிக்காதிருந்தபோதிலும், தொண்டர்கள் கையால் அரிசி குத்துவதையும், இயந்திரமின்றி கோதுமையின் உமி போக்குவதையும் ஆதரிக்க வேண்டுமென்பதும், நாட்டுச்சர்க்கரையையே உபயோகிக்கும் படி வற்புறுத்த வேண்டுமென்பதும், விளை பொருள்கள் சுத்தமாக விருக்கும்படி செய்ய ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டு மென்பதும் எனது வேண்டுகோள். இம்மூன்று விஷயங்களைப் பற்றியும் இதர கிராம கைத்தொழில்களைப்பற்றியும்தொண்டர்கள், விஷயங்களைச் சேகரித்து எனக்குத் தெரிவிக்க வேண்டும். கிராம கைத்தொழில் சங்கம் முற்றிலும் அரசியல் சம்பந்த மற்றதாக விருக்கு மென்ற உண்மையையே நான் வற்புறுத்திக்கூற விரும்புகின்றேன். கிராமவாசிகளின் செல்வநிலை, சுகாதாரம், ஒழுக்கம் இவை மேம்படவேண்டுமென்பதே சங்கத்தின் நோக்கமாகும். எல்லா கட்சியினரும் தொண்டர்களாகச் சேரலாம். வேலைத்திட்டத்தில் பூரண அநுதாபமும், சாத்தியமான வரையில் பணத்தாலும் பிரயாசையாலும் உதவிசெய்ய ஆர்வமுமிருந்தாலே போதுமானதாகும்." (தமிழ் நாடு)

### விழுப்புரம்.

இவ்வூர் முனிசிபாலிட்டிக்கு 9-11-34ந் தேதி சேர்மன் தேர்தல் நடைபெற்றது. தோழர் சி. ராஜமாணிக்கப்பத்தர் சேர்மனாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### ஓங்கோல்.

ஓங்கோல் முனிசிபல்சேர்மன் தேர்தல் 9-11-34ந்தேதி நடைபெற்றது. தோழர் தாரா கோபாலசாஸ்திரி சேர்மனாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### கொச்சியில் பெண் சேர்மன்.

9-11-34ந் தேதி மாலை கொச்சி முனிசிபல் சேர்மன் தேர்தல் நடைபெற்றது. அதில் தோழர் பர்னுடு அம்மையாருக்கு 10 ஓட்டுகளும், தோழர்வர்க்கீஸ் அவர்களுக்கு 8 ஓட்டுகளும் கிடைத்தது. தோழர் பர்னுடு அம்மையார் அதிக ஓட்டுகளைப்பெற்றதால் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# பகுத்தறிவு.

ஈரோடு, 1934-௵ நவம்பர்-௴ 11-௳

## காந்தியின் புதிய திட்டம்.

:0:

### மக்களைக் காட்டுமிராண்டி வாழ்க்கைக்குத் திருப்புதல்.

தோழர் காந்தி காங்கிரசை விட்டு விலகியது பொதுஜனங்களுக்கும், தேசத்துக்கும் பெரியதொருலாபகரமான காரியமானாலும் வேறு வழியில் அவர் செய்யப்புகுந்திருக்கும் காரியம் மனித சமூகத்துக்கே மிகவும் பிற்போக்கான காரியமே ஆகும்.

எப்படி எனில் தனது கொள்கையில்காங்கிரசில்இருப்பவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதுஒருபுறமிருக்க தான்(காந்தியார்)இனி செய்யப்போகும்காரியங்களை அவர்கள் தடை செய்யக்கூடும்என்கின்ற எண்ணத்தின்மீதே விலகினாலும் இனி அவர் விலகிச் செய்யப்போகும் காரியம் என்பது பெயர் மாத்திரத்தில் காதுக்கு இனிமையானதாக இருக்கின்றதே ஒழிய காரியத்தில் முழு மோசமானதென்றே சொல்ல வேண்டி இருக்கிறது.

அதாவது, கிராம புனருத்தாரணம் என்றும், கிராமகைத்தொழில் சங்கமென்றும் சொல்லிக்கொண்டு பணம் வசூல் செய்ய ஆரம்பித்துவிட்டார். டில்லியில் ஏதோ ஒரு கோடீஸ்வரர் 20 லட்சம் ரூபாய் கொடுத்ததாக பத்திரிகைகளில் சேதிவெளியாய் இருக்கின்றது. ஆனால் காந்தியார் அதை மறுக்கிறார் என்றாலும் ஏதோ சிலஆயிரக்கணக்கில் தான் வசூலாயிருக்கிறதென்றும், பின்னால் வசூலாகுமென்ற நம்பிக்கை இருக்கிறதென்றும், தொண்டர்கள் தான் அதிகம் வேண்டுமென்றும், தொண்டர்கள் சேர்ந்தால் பணம் தாராளமாய் கிடைக்குமென்றும் சொல்லுகிறார்.

இந்தச் சேதியைப்பார்த்த சோம்பேறிக்கூட்டத்தாருக்கு நாக்கில் தண்ணீர் சொட்ட ஆரம்பித்து விட்டது. வேலை இல்லாமல் திண்டாடி ஒரு வேளைச்சோற்றுக்கு எதையும் விற்கும் மனோதைரியமுடைய "வீரர்"களுக்கு அந்தப் படி செய்ய தைரியமும், உற்சாகமும் ஏற்பட்டு விட்டது.

எலக்ஷன் சமயத்தில் இப்படி ஒரு சேதியைப் பரப்பி விட்டால் வயிற்றுச்சோற்றுத் தொண்டர்கள் ஏராளமாய் வந்து சொன்னபடி கேட்பார்கள் என்கின்ற எண்ணத்தின் மீதே "20 லக்ஷ ரூபாய்வசூலாகி விட்டது, அதற்கு தொண்டர்கள் வேண்டும்" என்று ஒரு சேதியும் 'ரூபாய் வேண்டிய அளவு கிடைத்து விடும். ஆட்கள் தான் வேண்டும்" என்று ஒரு சேதியும் கட்டிவிடப்பட்டு விட்டதால் தேர்தலுக்கு தொண்டர்கள் ஏராளமாய் கிடைத்து விட்டார்கள். என்றாலும் இதனால் சாதித்துக் கொள்ளக்கூடியது இன்னது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தத் தந்திரங்களால் தேர்தல்,வெற்றி தோல்வி ஒரு புறமிருந்தாலும் பொதுஜனங்களுக்குள் இவ்வித தந்திரங்களையும், சூட்சிகளையும் வெளியாக்க நல்லதொரு சமயமும், தேவையும் அதற்கான சவுகரியமும், சரக்கும் ஏராளமாய் கிடைத்தது என்கின்ற அளவில் நாம் சந்தோஷப்படாமல் இருக்க முடியவில்லை.

அரசியல் கக்ஷியானாலும், வகுப்புக் கக்ஷியானாலும், பெயரளவில் வித்தியாசமே ஒழிய கொள்கையளவில் வித்தியாசமில்லை என்பதோடு தேசியக் கக்ஷியானாலும், தேசத் துரோகக் கக்ஷியானாலும், சரி. அல்லது சத்தியம் நீதி இவைகளை அடிப்படையாகக்கொண்ட கட்சியானாலும் அவை இல்லாத கட்சியானாலும் சரி, எல்லாம்பெயர்கள்மாத்திரம் வித்தியாசமே ஒழிய கொள்கையில் வித்தியாசமே இல்லையென்றும் பல தடவை சொல்லி வந்ததை இந்தத்தந்திரங்களும், சூட்சிகளும் உறுதிப்படுத்துகின்றன என்று தான் சொல்ல வேண்டும்.

மதத்தின் மூலமாகவும், ஜாதிகள் மூலமாகவும், உத்தியோகத்தின் மூலமாகவும் பார்ப்பனர்களுக்கு இந்திய நாட்டில் இருந்தசெல்வாக்கானது ஜஸ்டிஸ் கட்சி சுயமரியாதைக்கட்சி என்பவைகள் ஏற்பட்ட காலம் முதல் கொண்டு சிறிது சிறிதாய் குறைந்து வந்ததுடன் பார்ப்பனர்கள் என்றாலே அவர்கள்மீது ஒரு வித அருவை தோன்றும் படியான அளவுக்கு அவர்களது விஷயம் வெளியாகிவிட்டதனால் உடனே அவர்கள் தேசியம், தேசபக்தி என்கின்ற ஒரு புது மதத்தைச சிருஷ்டித்து அதற்கு காந்தி என்கின்ற ஒரு மனிதரை தெய்வத்தன்மை உடையவராக ஏன்? தெய்வ அவதாரமாகவே ஆக்கி அவருக்குப் பூஜைபுனஸ்காரம் நைவேத்தியம் உற்சவம் பஜனை முதலியவை செய்வதன் மூலமாகவே பிழைக்க முடியுமான நிலைமைக்கு வந்து விட வேண்டியவர்களாகி விட்டார்கள்.

இன்று இந்தியாவில் குறிப்பாக தென்னாட்டில் சிறப்பாகத் தமிழ் நாட்டில் காந்தி, காங்கிரஸ் என்று சொல்லாமல் பார்ப்பனர்களால் பிழைக்க முடியவில்லைஎன்பதோடு பார்ப்பனர்கள் போல் நோகாமல் பாடுபடாமல் வயிறுவளர்க்கலாம்எனக்கருதிப் படித்துவிட்டுத் திண்டாடும் மற்ற ஆட்களுடைய நிலைமையும் அதுபோலவே வந்து சேர்ந்து விட்டது.

இந்தக்கூடத்தார் இந்த நாட்டில் உள்ளவரை சோம்பேறிமடமான காங்கிரசுக்கும், அம்மடாதிபதியான காந்தியாருக்கும் பெருமை இல்லாமல் போகமுடியாது. காங்கிரசும், காந்தியாரும் இது வரை எப்படி நடந்து வந்திருந்த போதிலும் எவ்வளவு தவறுதல், மாறுதல், புரட்டுகள், தந்திரங்கள் முதலிய குணங்களால் நிறைந்தவர்களாய் இருந்தாலும் அவை வெளியாகவோ மக்களால் வெறுக்கப் படவோ கூடிய நிலைமை சுலபத்தில் ஏற்படுவதென்பது மிகவும் கஷ்டமாகவே இருக்கலாம்.

ஆனாலும் இன்று உலகில் பொதுவாகத்தோன்றியிருக்கும். ஒருவித புத்துணர்ச்சியானது சுலபத்தில் வெளியாக்கி வெறுக்கப் படச் செய்யச்செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

### சுயராஜ்யத்திற்கு புதிய வழி.

நிற்க, காந்தியாரின் புதிய கொள்கையாகிய "கிராமசீர்திருத்தத்தின் மூலம் சுயராஜ்யம் சம்பாதிக்கப்போகிறேன்" என்னும், விஷயத்தைப்பற்றிப் சிறிது யோசிப்போம். இதைத்தான் சுயராஜ்யம் என்று காந்தியார் இது வரை சொல்லி வந்த மார்க்கங்களை விட மோசமான மார்க்கமென்று நாம் சொன்னோம்.

ஏனென்றால் கிராமபுனருத்தாரணத்துக்கு தோழர் காந்தியார் 4திட்டங்கள் சொல்லுகிறார். அவற்றில்

ஒன்று:— ஆதாவற்று அழிந்து போகக்கூடிய நிலைமையில் இருக்கும் கைத்தொழில்களை ஆதரித்துப்புனருத்தாரணம்செய்வது.

இரண்டு:—அந்தக் கைத்தொழில்கள்மூலம்செய்யப்பட்டசாமான்களை ஜனங்கள் வாங்கும்படி செய்வது என்பனவாகும்.

இந்த இரண்டு காரியங்களினுடையவும் முடிவு என்ன ஆகும் என்பதை ஒரு வார்த்தையில்சொல்ல வேண்டுமானால்இந்த 20வது நூற்றாண்டில்உள்ளமக்களை காட்டுமிராண்டிப் பருவத்துக்கு அழைத்துச் செல்வது என்பதாகத்தான் சொல்லவேண்டும்.

ஏழைகள் ரக்ஷிப்புஎன்கின்றபெயரால் எப்படி ஒன்றுக்குமூன்று பங்கு பஞ்சைப் பாழாக்கி பெலமற்றதும், பார்வை யற்றதும், பிடித்தமில்லாததுமான துணியை உண்டாக்கி அதை ஒன்றுக்கு மூன்று பங்கு விலை கொடுத்து மக்களை வாங்கும்படி செய்து நூற்ற ஆட்களுக்கு மணிக்கு ஒரு காசு கொடுத்து விட்டு பிரசாரத்துக்காக என்று பொது மக்களிடம் பல லட்சக்கணக்கில் வசூலித்த பணத்தில் ஆள் ஒன்றுக்கு 50, 60, 100, 200 என்பது போன்ற மாதச் சம்பளமும் காங்கிரஸ் ஆட்களுக்குகதர்இலாக்காவின் பேரால் கொடுத்தும் வருவது போலவே இந்த கிராமப் புனருத்தாரணத்தில் சீமை ஊசிக்குப் பதிலாக கையினால் செய்த ஊசியும்அதுவும் காசுக்கு மூன்று ஊசி வாங்குவதற்குப்பதிலாகஏழைகள் பிழைக்க என்ற பிரசாரத்தால் ஊசி ஒன்று காலணா வீதம் வாங்கும்படியாகவும்நேரிடலாம்.

மற்றும் இதுபோலவே காஸ் லைட்டுக்குப் பதிலாக குத்து விளக்கும், கடிதாசிக்குப் பதிலாக ஓலையும், பவுண்டன் பேனாவுக்குப் பதிலாக நாணல் தட்டுப் பேனாவும் ஆகியவை போன்ற காரியங்களைச் செய்யும்படி மக்களைத் தூண்டலாம். அதை வாங்கும்படி பிரசாரம் செய்பலாம். இதற்கும் அதாவது இந்த இலாக்கா நிர்வாகத்துக்கும் ஆயிரக் கணக்கான மக்களை 50, 60, 100 200 ரூபாய் சம்பளங்களில் பார்ப்பனர்களையும் அவர்கள் அடிமை

களையும் நியமித்து அவர்களைக் கொண்டு பார்ப்பனப் பிரசாரமும் செய்யலாம்.

இதிலிருந்து தோழர் காந்தி இப்போதுள்ள மகாத்மா காந்தி என்னும் பட்டத்திற்கு மேல் அவதார புருஷர் காந்தி என்கின்ற பட்டத்தையும் அடையலாம். அறிவில்லாத ஜனங்களும் ஆலோசனையில்லாத ஜனங்களும் காந்தியார் படத்தை வீட்டில் வைத்து பூஜைசெய்வதோடல்லாமல் கோவில்கட்டிக் கல்விக்கிரகம் வைத்துப் பூஜையும் செய்யலாம்.

ஆனால் இவற்றால் எல்லாம் ஏற்படும் பயன் முன் சொன்னது போல் நாகரீக உலகம் என்பதில் இருந்து காட்டுமிராண்டி உலக வாழ்க்கைக்குப் போவது என்பதைத் தவிர வேறு ஒன்றும் ஏற்படப்போவதில்லை என்பது மாத்திரம் உறுதி.

இந்த யோக்கியதையில் தோழர் காந்தியார் கிராமப் புனருத்தாரண வேலைக்கு நிதி வசூலிக்கச்சுற்றுப்பிரயாணம் புறப்படப்போகிறாரென்றும், அதற்காக அந்தந்த மாகாணத்தில் சுற்றுப்பிரயாண திட்டம் போடப்படுகிறது என்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. இதுவும் ஒரு சமயம் இன்று "ஆதாரமற்ற" வதந்தியாக இருந்தாலும் கூடிய சீக்கிரத்தில் நடக்கப் போகின்றது என்பதில்நமக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இந்த நிலையில் உள்ள தலைவர்களையும், கொள்கைகளையும், அதைப்பின் பற்றும் மக்களையும் வைத்துக் கொண்டு இந்தியாவில் முற்போக்கும், மாறுதலும், விடுதலையும், சுதந்திரமும், கவலையற்ற தன்மையும், இன்பமும் ஏற்படவேண்டுமென்று ஆசைப்பட்டால் அது எப்படி முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை.

தோழர் காந்தியவர்கள் இந்தக் கிராமப் புனருத்தாரணத்துக்கு தற்காலீகமாக ஒரு வேலைத் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறார். அதாவது,

மில்லில் நெல் அரைக்காமல் கையால் அரிசி குத்தி உமி போக்குவது,

இயந்திரமின்றிக் கோதுமையை மாவாக்குவது,

நாட்டுச் சர்க்கரையை உபயோகிப்பது ஆகிய இந்த மூன்று காரியங்கள் இப்போது செய்வதற்கு தொண்டர்கள் வேண்டுமென்றும் தெரிவித்து மறுபடியும் வர்தாவில் இருந்து நவம்பர் 8ம் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இது சாத்தியமாகுமா? அப்படிச் சாத்தியமானாலும் மக்களுக்குக் கஷ்டம் ஒழிவதோ அல்லது பொருளாதார நிலைமை சம்ரசமடைவதோ அல்லது மேம்பாட்டடைவதோ ஆகிய காரியங்கள் ஏற்படுமா என்று கேட்கின்றோம்.

அரிசி கையினால் குத்துவது என்பதைத் தோழர் காந்தியார் ஆரஞ்சிப் பழம் ரசமாகப் பிழிந்து 2 கிளாஸ் சாப்பிடுவது போலவும், நல்ல வெள்ளாட்டுப் பால் 1 படியை ½ படியாகக் காய்ச்சி பனங்கல்கண்டு போட்டுச் சாப்பிடுவது போலவும், இரட்டைமெத்தையில் துயிலுவது போலவும் அவ்வளவு சுலபமான காரியம் என்று கருதிக்கொண்டிருக்கிறாரா என்பது நமக்கு விளங்கவில்லை.

நெல்லுக்குத்துவது என்றால் ஒரு பெண் காலை 5 மணிக்கு உலக்கை எடுத்தால் பகல் 10 மணிவரை இயந்திரம் குத்துவது போல் நின்று உலக்கை பிடித்து உகூ, உகூ என்று குத்தினால் பட்டணம் படியில் காலேஅரைக்கால்படி அல்லது அரைப்படி அரிசி அதுவும்குறுநொய்யும், பதரரிசியும் கொண்டதாகக்கிடைக்கும். அவ்வளவு மோசமான கூலி கொடுத்தாலும் கூட யந்திரத்தில் அரைக்கின்ற அரிசியுடன் போட்டி போட்டு விற்க முடியாது என்பதோடு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றும் சொல்லித்தான் ஆகவேண்டும். இது ஒரு புறமிருந்தாலும் பெண்மக்களிடம் இப்படிப்பட்ட வேலை வாங்குவதும், அவர்களை இந்தப்படி இம்சிப்பதும் ஜீவகாருண்ய வேலையாகுமா என்று கேட்கின்றோம்.

நூல் நூற்கும் விஷயத்திலேயும் பெண்களை மணிக்கொரு காசு கூலி பெறும் இயந்திரங்களாக ஆக்குவதோடு இப்போது நெல்லுக்குத்துகின்ற வேலைக்கு மறுபடியும் அவர்களை அனுப்புவது என்றால் இது எவ்வளவு தூரம் கைத்தொழில் அபிவிருத்தி என்பதை நாம் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

அன்றியும் இன்றுஒவ்வொரு முக்கிய கிராமத்திலும் ஒவ்வொரு நெல் அரைக்கும் மிஷின் ஏற்பட்டிருப்பதும், ஒவ்வொரு முக்கிய டவுனிலும் 4, 5 மிஷின்கள் ஏற்பட்டிருப்பதும் எவரும் அறியாததல்ல. இந்தியாவின் வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான மூட்டைகள் நெல்லாகவோ, அரிசியாகவோ வந்து குவிந்து இந்திய விவசாயிகளுக்குக் கட்டுபடி இல்லாமல் வரிகொடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் போதும், நெல் அழியாமல் இருக்கும் போதும் கையில் குத்த வேண்டும் என்று ஆரம்பித்தால் கட்டுபடி விஷயம் மாத்திரமல்லாமல் நமது பெண்கள் இனிப்பழையபடி நெல்லுக் குத்தும் வேலைக்குப் போகவும் கையில் உலக்கை எடுக்கவும் சம்மதிப்பார்களாஎன்றும்கேட்கின்றோம்.

பெண்கள் படிக்கவேண்டும், குழந்தைகளைப் படிப்பிக்க வேண்டும், சுகாதாரமாய் வாழத் தெரிந்து கொள்ள வேண்டும், அவர்கள் ஆண்களைப்போலவே சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டும், உத்தியோகங்கள் பார்க்க வேண்டும், புருஷர்களிடம் தங்களை சரிசமத்துவமாக நடத்துதலை எதிர் பார்க்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கின்ற இக்காலத்தில், மற்ற நாடுகளில் பெண்கள் மோட்டார் ஓட்டுவது, ஆகாயவிமானம் ஓட்டுவது, ரயில் டிராம் ஓட்டுவது, ஜட்ஜி வேலை வக்கில் வேலை பார்ப்பது முதலிய பல காரியங்களில் ஆண்களுடன் போட்டி போடுவதும், சில விஷயங்களில் ஆண்களுக்கு மேலாகவும் சத்தியும் அறிவும் உடையவர்களாகஇருக்கும் விஷயமும் தெரிந்திருந்தும் இந்தியப்பெண்களை நெல்லுக்குத்தவும், மாவரைக்கவும் திட்டம் போட்டுக்கொண்டுஅதிலிருந்து "சுயராஜ்யம் சம்பாதித்துக் கொடுக்கிறேன் பணம் கொடுங்கள், தொண்டர்கள் வாருங்கள்" என்றால் இது அறிவுடைமையான காரியமா அல்லது பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகத் தகுதியான காரியமா என்று கேட்கின்றோம்.

இவை ஒரு புறமிருக்க இன்று நெல்லைக் குத்துவதும், மாவு அரைப்பதும் போன்ற காரியங்களை யெல்லாம் கையினால் செய்யவேண்டும் என்றும், நூல்களை யெல்லாம் கையினால் நூற்க வேண்டும் என்றும் தீர்மானம் செய்து கையினால் குத்திய அரிசியையும் கையினால் அரைத்த மாவையும் தான் சாப்பிட வேண்டும் என்றும், கையினால் நெய்த துணியைத் தான் கட்டவேண்டும் என்றும் உத்திரவு போட்டு விடுவோமேயானால் இந்தியமக்களுக்கு வேண்டிய அரிசியும், மாவும், துணியும் மாத்திரம் தயார் செய்ய இந்திய மக்கள் முழுவதும் அவர்கள் ஆயுள் காலம் முழுவதும் ஈடுபட்டிருக்க வேண்டியதோடு வெளிநாட்டிலிருந்தும் மக்கள் வந்து நெல்லுக் குத்தி மாவரைத்து நூல் நூற்றுக்கொடுத்து விட்டுப் போக வேண்டிவரும் என்பதைப் புள்ளிவிவரங்களோடு நிரூபிக்கத் தயாராயிருக்கிறோம்.

பிறகு நெல்லு, பஞ்சுக்கான பருத்தி விவசாயம் செய்யவும், வீடு வாசல் கட்டவும், நிர்வாகம் செய்யவுமான பல காரியம் பார்க்க ஆட்களுக்கு எங்கு போவதுஎன்று தோழர் காந்தியாரை வணக்கத்துடன் கேட்கின்றோம்.

குழந்தைகுட்டி கிழடு கிண்டு ஆகியவர்களை நீக்கிவிட்டு வேலைசெய்யத் தகுதியுள்ள மக்களை மாத்திரம் எடுத்துக்கொண்டால் மொத்த ஜனத்தொகையில் 3-ல் ஒரு பாகம் மக்கள்கூட வேலை செய்ய லாயக்குள்ளவர்கள் இருக்கமாட்டார்கள். இவர்களில் "பாடுபடுவது பாவம்" என்றிருக்கிற பார்ப்பனர்களையும் அவர்களைப்போல் காப்பிஅடிக்கும் "இந்து சட்டைக்காரர்" (வெள்ளையர் கலப்பால் பிறந்தவர்களை வெள்ளைச் சட்டைக்காரர்கள் என்பது போலப் பார்ப்பனர்களின் நடையுடை பாவனைகளைக்கொண்ட பார்ப்பனதாசர்கள்) என்கின்ற கூட்டத்தாரையும் நீக்கி விட்டால் மீதி இருப்பவர்களிடமிருந்து செய்யப்படும் கைக்குத்து அரிசியும், கைராட்டினத்துணியும் கிடைக்காமல் வெகுபேர் பட்டினியாயும், நிர்வாணமாயும் தான் இருக்கநேரிடும் என்பது கல்லுப்போன்ற உறுதியாகும்.

ஆகவே தோழர் காந்தியார் தான் ஒருவர் உயிருடன் இருக்கிறார் என்பதை உலகம் அறியும் படியாக ஏதாவது ஒரு காரியமும், ஒருவித விளம்பரமும் இருக்கவேண்டும் என்பதைத் தவிர மற்றபடி இந்த

திட்டங்களால் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்பட்டுவிடப் போவதில்லை

ஆகவே "தகுதியுள்ளவன் தான் அடைவான்" என்கின்ற ஞான மொழிக்கு ஏற்ப இந்திய மக்களுக்குளன்றையதினம் இம்மாதிரி சூட்சிகளையும், அறியாமையையும், அறியும்படியான பகுத்தறிவு ஏற்படுகின்றதோ அன்றுதான் அவர்கள்மனிதத்தன்மையை அடைய முடியும் என்பதோடு அதுவரையில் தகுதி உள்ளவனுக்கு அடிமையாய் இருக்க வேண்டியதுதான் இயற்கை விதிஎன்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

# இனியாவது உணருவாரா?

---

காங்கிரஸ்காரர் என்பவர்கள் 100க்கு 99 முக்காலே மூன்றுவீசம் பேரும் பொய், புரட்டு, சூட்சி, தந்திரம், சமயத்துக்குத் தகுந்தபடி சரணம் போட்டுக்கொள்வது ஆகிய குணங்களையே கொள்கையாகவும், திட்டமாகவும் வைத்து அதற்கு நீதியும், சத்தியமும் என்று பெயர் கொடுத்து காங்கிரஸ் காரியத்தை அதாவது தங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் என்கின்ற அபிப்பிராயமானது நமக்கு நாளுக்கு நாள் பலப்படுவதுடன் வளர்ந்து கொண்டே வருகிறது.

பாமர மக்களை ஏமாற்றுவதற்கென்று செய்யப்படும் சூட்சிகளை இன்றைய காங்கிரஸ் பிரசாரத்தின் பயனாய் மக்கள் அறிய முடியாமல் இருந்தாலும்கூட அதற்கும் ஒரு அளவோ, மானம்வெட்கமோ, மனிதத்தன்மையோ இல்லாமல் போய் விட்டதை வெளியாக்காமல் இருக்க முடியவில்லை.

இந்த 5, 6 மாத காலத்தில் தமிழ் நாட்டில் ஸ்தலஸ்தாபனங்களுக்குப் பல தேர்தல்கள் நடந்திருக்கின்றன. அவற்றிற்காக ஒவ்வொரு ஊரிலும் பார்ப்பனர்--பார்ப்பனரல்லாதார் என்றும், காங்கிரசுக்காரர் காங்கிரசுக்காரரல்லாதார் என்றும் சொல்லப்பட்ட பிரிவுகளின் பேரால் தேர்தல்கள் நடந்தன. அவற்றுள் ஜெயித்தால் "காங்கிரசுக்கு ஜெயம்" என்று கொட்டை எழுத்தில் போட்டுக்கொள்ளுவதும், தோற்றால் "உப்புக்கண்டம் (காய்ந்த மாமிசத்துண்டு) பறி கொடுத்த பார்ப்பனத்தி" போல் வாயடைத்துக்கொள்ளுவதுமான காரியங்களைச் செய்து வந்தது யாவரும் அறிந்ததாகும்.

உதாரணமாக சிறிது நாட்களுக்குமுன் சென்னையில் தோழர்கள் ஒரு கோயங்கா அவர்களுக்கும், ஒரு நாயுடு அவர்களுக்கும் நடந்த தேர்தலில் கோயங்காவை காங்கிரஸ் காரராக்கி நாயுடுவை ஜஸ்டிஸ் கட்சியாராக்கி காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர், ராஜகோபாலாச்சாரியார், பாஷியம் அய்யங்கார், கிருஷ்ணசாமி சாஸ்திரியார் என்பவர்கள் உள்பட 'இந்து', 'சுதேசமித்திரன்' உள்பட எல்லாபார்ப்பனர்களும் தோழர் கோயங்கா காங்கிரஸ் அபேட்சகர் என்று ஜனங்களை நம்பும்படி செய்து பிரசாரம் செய்தார்கள்.

கடைசியில் கோயங்கா அவர்கள் பதினாயிரக்கணக்கான ரூபாய் நஷ்டப்பட்டும் தோல்வி அடைந்ததும் தோழர்கோயங்கா காங்கிரஸ்காரர் அல்ல என்று சொல்லி விட்டார்கள். இது போல் பல காரியங்கள் செய்து வந்தும் சமீபத்தில்—இந்த வாரத்தில் நவம்பர் 9ந்தேதி சேலத்தில் நடந்த முனிசிபல் எலக்‌ஷனில் தோழர் வெங்கிடப்பசெட்டியார் அபேட்சகர் ஸ்தானமானது காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்டு தோழர் அய்யாசாமி செட்டியார் பார்ப்பனர் அல்லாதார் சார்பாய்(ஜஸ்டிஸ்கட்சி சார்பாய்) நிறுத்தப்பட்டு காங்கிரஸ்காரர்கள் தோழர் ராஜகோபாலாச்சாரியார் உள்பட அன்று சேலத்துக்கு வந்து வெங்கிடப்ப செட்டியாருக்காக எவ்வளவோ பாடுபட்டும் வெங்கிடப்ப செட்டியாருக்கு 8 ஓட்டும், அய்யாசாமி செட்டியாருக்கு 25 ஓட்டும் கிடைத்து பாதாள தோல்வி அடைந்து விட்டார் என்கின்ற சேதி தெரிந்ததும் "வெங்கிடப்ப செட்டியார் காங்கிரஸ் அபேட்சகரல்ல" என்று தோழர் ராஜகோபாலாச்சாரியார் முதல் கொண்டு எல்லா பார்ப்பனப் பத்திரிக்கைக்காரர்களும் சொல்லிவிட்டார்கள் என்றால் இவர்களது பல்ட்டிக்கும், சமயத்துக்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவதற்கும் வேறு என்ன சாட்சி வேண்டும் என்று கேட்கின்றோம்.

தோழர்கள் வெங்கிடப்ப செட்டியார், சடகோப முதலியார் ஆகிய இரு அபேட்சகர்களை காங்கிரஸ் அபேட்சகர்களாக வைத்து காங்கிரஸ்காரர்கள் "அது அல்லாத" பார்ப்பனர்கள் என்பவர்களுள்பட பெரிய கூட்டம் கூடி ரகசிய ஓட்டுடெடுத்து காங்கிரசு சார்பாகவும், பார்ப்பனர்கள் சார்பாகவும் தோழர் வெங்கிடப்பசெட்டியாரை நிறுத்தி காங்கிரசின் பேரால், காந்தியின் பேரால் கவுன்சிலர்களிடம் முழங்கால் முறிய நடந்து கடைசியில் பாதாள தோல்வி ஏற்பட்டதும் வெங்கிடப்ப செட்டியார் காங்கிரசுக்காரர் அல்ல என்று சொல்லிவிட்டால் காங்கிசுக்கு இருக்கும் நேர்மை சத்தியம், நீதி ஆகிய குணங்களுக்கு வேறு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்க வில்லை. தோழர் வெங்கிடப்ப செட்டியார் அவர்கள் காங்கிரசில் 15 வருஷ காலமாய் இருந்து வருபவர். அவர் கதர் உடுத்திவருபவர். பார்ப்பனர்கள் பூதேவர்கள் என்பதை ஒப்புக்கொண்டு பார்ப்பனரல்லாதார்களையும் ஜஸ்டிஸ் கட்சியாரையும் இணையில்லாக் கேவலமாய் பேசி வந்தவர்—வருகிறவர். பார்ப்பன நாகரீகம் ஆச்சார அனுஷ்டானங்கள், கோயில், குளம், பக்தி, பிராமண விஸ்வாசம் ஆகியவைகளில் இணையற்றவர். இப்படி இருந்தும் அவருக்கு தோல்வி ஏற்பட்டவுடன் அடியோடு அவரை ஜனங்கள் கேவலமாய் நினைக்கும்படியும் அவர் தோல்விக்கு சிலராவது பரிதாபப்படாமல் இருக்கும்படிக்கும் "காங்கிரசுக்காரர் அல்லாததால் அவர் தோல்வி அடைந்தது சரிதான்" என்று நினைக்கும்படிக்கும், சொல்லும்படிக்கும் செய்து விட்டார்கள் என்றால் இந்தப்பார்ப்பனரை நம்புவோர்கள்சமயத்தில் கைவிடப்பட்டு விடுவார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாக்ஷி வேண்டும் என்று கேட்கின்றோம்.

வெற்றி தோல்வி இயற்கை. பணச்செலவும் சூட்சியும் நேர்மையற்ற காரியங்களும் காலித்தனமும் செய்தவர்களுக்கே பெரிதும் வெற்றி ஏற்படுவது என்பது சகஜம்.

வெற்றி தோல்வியில் மனிதனுடையவோ, கட்சியுடையவோ, மேன்மையோ, நாணயமோ பாதிக்கப்பட்டு விடுவதில்லை.

இது வரை பல கட்சி தோல்வியடைந்தும், பல கட்சி வெற்றியடைந்தும் வந்திருக்கின்றது என்றாலும் அதனாலேயே பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு விடவும் இல்லை. எந்தக் கட்சியும் முழுகிப்போய் விடவுமில்லை.

ஆனால் கண்ணியமாய் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் இந்தப்படி உடனுக்குடன் அந்தர் அடிப்பதென்றால் இவர்களுள் நாணயமும் சுயமரியாதையும் உள்ள மக்கள் எப்படி நெருங்குகிறார்கள் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. இனியாவது தோழர் வெங்கிடப்ப செட்டியார் அவர்கள் பார்ப்பனர்களுடையவும், காங்கிரசுக்காரர்கள் என்பவர்களுடையவும் யோக்கியதையை உணர வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

---

## பகுத்தறிவாலயம் சென்னை.

---

இப்பகுத்தறிவால்யத்தின் பொதுக்கூட்டம் நாளது நவம்பர் மாதம் 6-ந்தேதி மாலை 6½ மணிக்கு, சென்னை தங்கசாலைதெரு. 297நெ. கட்டிடத்தில் கூடிற்று. ஏறக்குறைய 40 அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள். தோழர் தருமதீரர் அவர்கள் தலைவராகவும், பண்டிதர் குப்புச்சாமி அவர்கள் உபதலைவராகவும், தோழர்கள் எஸ். என். சங்கர நாகலிங்கம், பி. ஏ., பி. எ., சண்முக சுந்தரம் இவர்கள் காரியதரிசிகளாகவும், தோழர் வி. சங்கரன் அவர்கள் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் 6 காரிய நிருவாக அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவ்வமயம் தலைவர் தருமதீரர் முன்னுரையாக "பகுத்தறிவாலயம்" என்றால் என்ன? அது எதற்காக ஸ்தாபிக்கப்பட்டது? என்பதை அங்கத்தினர்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் வெகு விரிவாகவும், அழகாகவும், எடுத்துக்கூறினர்.

அவைகளில் முக்கியமாக பழைய பழக்க வழக்கங்களை மூடத்தனமாக நம்பி, கையாண்டு வரும் விஷயங்களை அறவே ஒழித்து விட பகுத்தறிவு என்னும் ஆயுதத்தை முன்பே நாம் பெற்றிருந்தாலும், அதைச்சரிவர உபயோகிக்க முடியாமல் இருக்கும் மனிதர்களுக்கு மேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் இருக்க வேண்டியதவசியமென்றும், தற்சமயம் சென்னையில், இளைஞர் மன்றம் என்னும் சங்கம் ஒன்றுதான் இவ்விஷயத்தில் உழைப்பதாகவும், இவைபோன்ற சங்கங்கள் ஆங்காங்கு இன்னும் அதிகமாக ஸ்தாபிக்கப் படவேண்டுமென்றும், அவ்வப்போது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் போன்ற பெரியார்களைக்கொண்டு பொதுக்கூட்டங்கள் கூட்டி பிரசாரங்கள் செய்ய வேண்டுமென்றும், இவைகளைச் செய்வதற்கு பண உதவியும் தேவையாகையால் அங்கத்தினர்கள் அதிகமாகச்சேர்க்க முயற்சிக்க வேண்டுமென்றும் பேசினார். பிறகு இளைஞர் மன்றத்தின் அங்கத்தினர்கள் சிலர் பேசினார்கள்.

இரவு 9 மணிக்கு தலைவருக்கும் மற்றுமுள்ள அங்கத்தினர்களுக்கும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது எனக்காரியதரிசி எழுதுகிறார்.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

மாற்றவோ, கூட்டவோ, குறைக்கவோ, தடுக்கவோ முடியாது. (ஏதோ விஞ்ஞான சாஸ்திரிகள் புதிய முறையெதையும் கண்டுபிடித்து கொடிய இயற்கை நிகழ்ச்சிகளைத் தடுத்தால் அல்லாமல் தெய்வீக நம்பிக்கையால் ஒரு நாளும் முடிவதில்லை) அதேபோல் தெய்வீக நம்பிக்கையால்உலக வறுமையை.

பொருளாதாரக் கொடுமையை போக்க முடியாது. விஞ்ஞான மார்க்கத்தால் தான் பொருளாதாரக் கொடுமையை போக்க முடியும். என்று நியாயத்தை எடுத்துக் காட்டி கடவுள் என்னும் மூட நம்பிக்கையிலிருந்தும் சுய நலத்துவம் என்னும் கொடுமையிலிருந்தும் மக்களை விடுவித்து மேன்மையடையச் செய்வதற்காக பாடுபடுகிறவர்களை "புத்திகெட்ட நாஸ்திகன்" என்றும் சுத்தப் பைத்தியகாரன்" என்றும் சொல்லி விடுகிறீர்கள்!

ஆனால் இந்த விபரீதங்களையும், கொடுமைகளையும், துன்பங்களையும் கண்ணாரக் கண்டும், கடவுளை நம்பி ஆலயங்களை நிறுவி அதில் போய் இரவு பகலாய் பிரார்த்திக்கும் நீங்கள் (ஆஸ்திகர்கள்) மாத்திரம் எல்லையற்ற பிரபஞ்சத்தின் ஆரம்பத்தையும், அதற்குக் காரணத்தையும் அதி நுட்பமாகக் கண்டுபிடித்த கரைகடந்த ஞானிகள்போலும்! இல்லை!!இல்லை!!! உங்களைப்போல் ஒரு ஆதாரமும் அத்தாட்சியும் இல்லாமல்—உலக துன்பத்தையும்—கொடிய இயற்கை நிகழ்ச்சிகளையும் பார்த்தும் கண்ணைப் பொத்திக்கொண்டு "கடவுள் உலகத்தைப் படைத்து ரட்சித்து வருகிறார்" என்று மனம்போன போக்கில் சொல்லிவிட்டு உலகதுன்பத்திற்கும், வறுமைக்கும், நோய்க்கும் கொடிய இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் பதில் சொல்ல முடியாமல் நாங்கள் (நாஸ்திகர்கள்) திண்டாடவில்லை.

கடவுள் உலகத்தைப் படைத்து ரட்சித்துவருகிறார்" என்கின்றீர்கள். கடவுளைப் படைத்து ரட்சித்து வருவது யார்? என்னும் கேள்விக்குப் பதில் சொல்கிறீர்கள் இல்லை. "கடவுள் தானே சமைந்தார்" என்கிறீர்கள். கடவுள் தானே சமைவதற்கும் கடவுள் சமைவதற்கு வேண்டிய பொருள்கள் கடவுளுக்கு முன்னிருந்து இருக்கவேண்டுமே, அப்படியானால் அந்தப் பொருள்களை உண்டுபண்ணியவன் யார்? அந்தப் பொருள்களையெல்லாம் சேர்த்து கடவுளை உருவகப்படுத்தியவன் யார்? என்னும் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் கேள்வி கேட்கும் எங்களை "சைத்தான்" என்று கோஷிக்கிறீர்கள். அல்லது "தன்னைத்தானே கடவுள் சிருஷ்டித்துக்கொண்டார்" என்றால் "தான்" முந்தி யிருந்தால் தான் தன்னை சிருஷ்டித்துக்கொள்ள முடியும்,—"தான்" முன்னமே யிருந்தால் தன்னை முன்னமே சிருஷ்டித்தது யார்? அல்லது "தன்னைத் தான் சிருஷ்டித்துக் கொண்டார்" என்பதின் அர்த்தமென்ன? என்று கேட்கும் எங்களுடைய நியாயமான கேள்விக்குஒரு பதிலும் சொல்லமுடியாமல் வானத்தைப் பார்த்துப்பேந்தப்பேந்தவிழிக்கும்நீங்கள் பிரபஞ்சத்தின் நுட்பங்கள் எல்லாவற்றையும் ஊடுருவிச் சென்று "மூலப் பொருளா"கிய "கடவுள்" என்னும் ஒன்றைக் கண்டுபிடித்தவர்கள்போல் பிதற்றுகிறீர்கள்!

பெரும்பான்மையான மக்களை வாட்டி வதைக்கும் கொடிய வறுமையை—நோயை "கடவுளால் படைக்கப்பட்ட மாற்ற முடியாத இயற்கை" என்று சொல்லி பெரும் பான்மையான மக்களை வஞ்சிக்கிறீர்கள். இந்தப்படி உங்களைப் போல் நாங்கள் கண் மூடித்தனமாக சொல்லிவிட்டு வானத்தைப் பார்த்துக்கொடிருக்க மாட்டோம்—பொதுஜனங்களை வஞ்சித்து வரமாட்டோம்!! நாங்கள் சொல்வதையெல்லாம் நாங்களே நிரூபித்துக் காட்டுவோம், தெரியாததை தெரியாது என்று கௌரவமாக ஒப்புக்கொள்ளுவோம். உலக வறுமையை ஒழித்து எல்லோரும் இன்புற்றிருக்கும் சமரச சன்மார்க்க மார்க்கத்தைக் காட்டுவோம். இப்போதாவது நாம் கடவுள் நம்பிக்கையானது மற்றைய எண்ணற்ற மூட நம்பிக்கையை விடப் பெரிய—மனிதசமூகத்தையே பாழ்படுத்தி வரும் மூட நம்பிக்கை என்று சொல்லலாம் அன்றோ!

இந்த நம்பிக்கை செல்வவான்களுக்கும், மேல் ஜாதிக்காரர்களுக்கும் உழைப்பாளிகளை வஞ்சித்து வாழ்வதற்கும் உதவியாய் இருந்து வருகிறதன்றோ!! இந்த நம்பிக்கை எளியோர் செல்வத்தை வலியோர் கைப்பற்றி கடவுள் நம்மை இந்தப்படி அனுபவிக்கச் செய்து விட்டார் என்று ஏமாற்றமடைவதற்கு ஏதுவாயிருந்து வருகிறதன்றோ!!! இப்போது எல்லாவற்றிற்கும் கடவுள் நம்பிக்கைதான் காரணம் என்று உணருகிறீர்களா? கடவுள் நம்பிக்கையானது பகுத்தறிவுள்ள மனித வாழ்க்கையை என்ன பாடு படுத்தியது என்று பாருங்கள்.

மனிதனின் அழகிய வாழ்க்கை முழுதையும் இந்தக் "கடவுள்" என்னும் கற்பனைச் சொல்லில் மனிதன் வைத்த மூட நம்பிக்கை கவைக்குதவாமல் செய்து விட்டது. இம் மூட நம்பிக்கை மனிதனை என்னென்ன மாதிரியெல்லாமோ பாழ்படுத்தி விட்டது. சுருங்கச் சொல்லின் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு—கவலையற்ற இன்ப வாழ்க்கைக்கு வழிகாட்டியாகிய பகுத்தறிவு ஜோதியை பிரகாசிக்க விடாமல் இக்கடவுள் நம்பிக்கையென்னும் கார்மேகம் சதா சூழ்ந்து கொண்டிருக்கிறது. பண்டைக்காலக் காட்டுமிராண்டிகளிடத்தில் பயத்தால் எழுந்த இந்தக்கடவுள் நம்பிக்கை வாழையடி வாழையாக பெருகிக் கொண்டே வந்து பலவித வியாக்கியானங்கள் ஏற்பட்டு இன்று அது எல்லா மக்களையும் தொத்து நோயைப்போல் ஒட்டிக்கொண்டு மனிதனின் பகுத்தறிவு ஒளியை வெளிக்காட்டவிடாமல் கார்மேகம் போல் சூழ்ந்து ஞானத்தை மறைத்துக் கொண்டிருக்கிறது. கவிழ்ந்து மூடிக்கொண்டிருக்கும் இந்தக் கார்மேகத்தை கலைத்து பகுத்தறிவு ஜோதியை பிரகாசிக்கச் செய்யப் பிரயத்தனப்படுகிறவர்களை இன்றைய உலகம் "நாஸ்திகர்கள்" "மஹாகெட்ட துஷ்டர்கள், ஒழுக்கத்தை அழிப்பவர்கள், சைத்தான்கள்" என்றெல்லாம் வைது தூற்றுகிறார்கள்! பண்டைக்காலத்தில் இக்கார்மேகத்தைக் கலைத்து பகுத்தறிவு ஜோதியை பிரகாசிக்கச் செய்வதற்கு முன் வந்தவர்களை எல்லாம் மூடநம்பிக்கையாளர்கள் கழுமரத்திற்கும்,வாளுக்கும்,நெருப்பிற்கும், சிறைக்கும் இரையாக்கி வந்தார்கள்! இது மிருகத்தினிடத்திலிருந்து பரிணமித்து வந்த மிருக சந்ததியாகிய மனிதன் அவனுடைய மிருகத்தனத்தை விட்டும் மனிதத்தனத்திற்கு மாற பிரியப்படாததை காட்டுகின்றன. மனிதன் மிருகத்தினிடத்திலிருந்து மாறி வந்தவன் ஆனாலும் அவன் மிருகத்தைவிட கொடிய மிருகத்தை விட கீழான- மிருகமாக மாறி விட்டான்!

எது எப்படியானாலும் இவைகள் எல்லாவற்றையும்பார்க்கும் போதுபக்தர்களும், மதங்களும் பிரமாதமாக பறைசாற்றி—ஆலயங்கட்டி இரவு பகலாக வணங்கி வரும் கடவுள்—ஆண்டவன்—அல்லா என்பதொன்று இல்லை என்பதுஉண்மையாகத் தெரிகின்றன. இப்படியெல்லாம் சொல்லும் என்னை நீங்கள் "பைத்தியக்காரன், ஒழுக்கம் கெட்டவன், கடவுள் துவேஷி, சைத்தான்" என்று யோசியாமல் பைத்தியக்காரத்தனமாய் எண்ணினாலும் சரி எண்ணாது போனாலும் சரி எனக்கென்னமோ "கடவுள்" என்பது மூட நம்பிக்கையே ஒழிய உண்மை அல்ல என்பதில் பெருத்த நம்பிக்கையுண்டு. இந்த நம்பிக்கை சிந்திக்க சிந்திக்க பெருத்த ருஜுக்களுடன் பலப்பட்டு வருகிறது ஆனால் கடவுள் நம்பிக்கையுள்ள நீங்கள் கடவுளைப்பற்றி சொல்லப்படுபவைகளையும், கடவுளைப்பற்றி நீங்கள்நம்பிக்கை கொண்டிருப்பவைகளையும், கடவுள் பெயரால் நிகழ்ந்தவைகளையும், கடவுளின் மதங்களால் ஏற்பட்டிருக்கும் விபரீதங்களையும், கடவுள் பெயரால் நடக்கும் காரியங்களையும், பெரும் பான்மையான ஏழைகளின் கண்ணீரையும், "கடவுளால் படைத்து ரட்சிக்கப்பட்டுவரும்" பிரபஞ்சத்தில் நிகழும் பயங்கரமான இடி, மின்னல், எரிமலை, பூகம்பம், வெள்ளம், பிரளயம், நோய், பஞ்சம், துன்பம் முதலிய நிகழ்ச்சிகளையும் நீங்கள் நம்பிக்கொண்டிருக்கும் அளவிலா அருட்சோதிக்கடவுளுடன் ஒத்திட்டுப்பாருங்கள்! ஒன்று நீங்கள் அப்படி ஆராய்ச்சி செய்து பார்க்கும் போது உங்களுடைய மாண்பு மிக்க வேதம், புராணம், இதிகாசம், ஆபாசம், பைபில், குர்ஆன் இவைகளில் சொல்லப்பட்டிருக்கும் கடவுளின் நற்குணங்களுடன் மேற்காட்டிய கொடிய நிகழ்ச்சிகளையும், கொடுமைகளையும் ஒத்திட்டு நடு நிலைமையில் இருந்து பகுத்தறிவுக் கண்கொண்டு பரிசீலனை செய்யுங்கள்! அப்போது தான் உங்களுக்குஉண்மை என்னும், சத்தியத்தின் திறவு கோல் கிடைக்கும்! பிற்பாடு உங்களுடைய பகுத்தறிவைக்கவிழ்ந்து மூடிக்கொண்டிருக்கும்மூட நம்பிக்கைக்கார் மேகத்தைக் கலைத்து சின்னபின்னப் படுத்திக் கொண்டு உங்களுடைய பகுத்தறிவு ஜோதி பிரகாசிக்க ஆரம்பிக்கும்! உடனே நீங்கள் உண்மையைஅறியும் உத்தம வீரர்களாவீர்கள்! பிற்பாடு இவ்வுலகத்தையே கவலை, தொல்லை, துன்பம், வறுமை, அதிருப்தி, பயம் என்பவைகளற்ற "சுவர்க்க லோக"மாக நிர்மாணிக்க முடியும் என்றுணர்வீர்கள்! நீங்களேசர்வசக்தியும், சர்வ ஞானமும்,நிறைந்த அன்பும், நேரான நீதியும் படைத்தவர்கள் என்று நம்புவீர்கள்!

## மனிதனின் இயற்கை சுபாவம் லோகாயுதமே.

ஒவ்வொரு மனிதனும் லோகாயுதத்தையே அதாவது இந்நிலவுலகில் இன்புற்று வாழ்வதையே பிரதானமாகக் கருதுகிறான். மனிதனின் இயற்கை சுபாவமே அப்படித்தானிருக்கிறது. இதை மாற்றியமைக்க எத்தகையவர்களாலும்-எத்தகைய "சக்தி"யாலும் முடியவே முடியாது. இதை மாற்ற முயன்றவர்கள் அதாவது இயற்கையுடன்போர்தொடுத்த "தெய்வலோகப்"பித்தர்கள் எல்லாம் தோல்வி யடைந்தே வந்திருக்கிறார்கள். மனிதனின் இயற்கை சுபாவத்தை மாற்றியமைக்க இவர்களுடைய தாத்தா வந்தாலும் புத்தர்—இயேசு—முஹம்மது (இந்துக்களுக்களுக்கு யாரைச் சொல்லுவதென்று தெரியவில்லை) வந்தாலும் முடியாது. வீணர்களும் அறியாமை நிறைந்தவர்களுமான—மனித சுபாவத்தை அறியாதவர்கள் தான் இதில் ஈடு படுவது. கற்பனை வாழ்க்கையில் பற்றுக் கொண்டு இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து கானகத்திற்குச் சென்ற துறவிகளும், தபசிகளும், பக்தர்களும் நங்கைகளைக் கண்டு கற்பனை வாழ்க்கையை அனுஷ்டிக்க முடியாமல் பிரத்தியட்ச வாழ்க்கை வாழ்வதற்கு வீடுதிரும்பினார்கள்! மனிதன்வறுமை-துக்கம்-கவலையற்று இன்பவாழ்வு வாழவே எல்லாம்உள்ள இந்த உலகில் பிறந்திருக்கிறான்! ஒவ்வொருவனும் அவன்எத்தகைய தெய்வலோகப் பிரியனாயிருந்தாலும்-புத்தரைப் போன்ற நிர்வாணப்பிரியனாயிருந்தாலும் இவ்வுலகில் இன்பமயமாக வாழ்வதி

லேயே கண்ணும் கருத்துமாய் மோகம்கொண்டவனாயிருந்து வருகிறான். இதையடைய பலவழிகளிலும் இயற்கையான-ஒழுங்கான வழிகளிலும் முயற்சிக்கிறான். இதையடைய இயற்கையான-ஒழுங்கான வழியில்முடியாவிட்டால் தவறுதலான வழியில் இறங்கிவிடுகிறான். அப்படியானால் நாம் எல்லோரும் கவலையற்று துன்பமற்று இன்பவாழ்க்கை வாழ முடியுமான இயற்கையான ஒழுங்கான பகுத்தறிவு மார்க்கத்தை ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது? எனக் கேட்கிறேன்.

## அகில மலாயா சீர்திருத்த மகாநாடுகள்.

31-10-34 நாளது டிசம்பர் மீ 1, 2, 3ம் உ கோலக்கன்சார் தமிழர் சீர்திருத்த சங்கத்தின் ஆதரவில் அகில மலாயா சீர்திருத்த நான்காம் மகாநாடு, அகில மலாயா சீர்திருத்த வாலிபர் மூன்றாம் மகாநாடு, அகில மலாயா சீர்திருத்த மாதர் முதலாம் மகாநாடு என மூன்று மகாநாடுகளும் கோலக்கன்சார் தமிழர் சீர்திருத்த சங்கத்தினால் நடத்தப்படும். தமிழர் பள்ளிக்கூடத்தின் முதல் வருட விழாவும், இச் சீர்திருத்த சங்கம் தமக்கென தயாரித்துள்ள புதுக் கட்டிடத் திறப்பு விழாவும் நடைபெறும்.

கோலக்கன்சார் தமிழர் சீர்திருத்த சங்கக் கட்டிடத்தைத் திறந்துவைக்க கோலக்கன்சார் மன்னராகிய ஹிஸ் ஹைனஸ் ஸர் ஆலம் இஸ்கிந்தர் ஷா. ஜி. ஸி. எம். ஜி. கே. ஸி. வி. ஓ. சுல்தான் அவர்கள் வாக்களித்துள்ளனர். இக்கட்டிடத்திறப்புவிழா 1-12-1934 மாலை 4 மணிக்கு நடைபெறும். பின் தொடர்பாக மற்றவைகள் நடைபெறலாகும் என கௌரவ பொதுக் காரியதரிசி அற்புதாநந்தா, எழுதுகிறார்.

(8.ம் பக்கத்தொடர்ச்சி)

டெம்பரரி பிரசிடெண்டு தோழர் தே. ல. பெருமாள் செட்டியாரின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. காலை 8 மணிக்கே சரியாய் எல்லா மெம்பர்களும் வந்து விட்டார்கள். எல்லா மெம்பர்களும் ராஜ விஸ்வாசப் பிரமாணம் செய்த பிறகு, பிரசிடெண்டு ஸ்தாபனத்துக்கு தோழர் தே. கு. பெருமாள் செட்டியார் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## லால்குடி.

லால்குடி பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் 8-11-34 தேதி மாலை 4 மணிக்கு ஆபீஸ் கட்டிடத்தில் நடந்தேறியது. தலைவர் பதவிக்குத் தோழர் எல். எம். ராமசாமி பிள்ளை போட்டியன்னியில் போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## திருவாதி.

திருவாதி பஞ்சாயத்து போர்டின் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் கூட்டம் 8-11-34 மாலை தோழர் பகவதி பிள்ளை தலைமையில் நடந்தது. தோழர் வி. வைத்தியநாதய்யர் போர்டின் தலைவராகப் போட்டியன்னியில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## காவேரிப்பாக்கம்.

7.11.34ந் தேதி மாலை 2-30 மணிக்கு காவேரிப்பாக்கம் யூனியன் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் நடைபெற்றது. தோழர் டி. தேவராஜ முதலியார் மூன்றாவது தடவையாகத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர் எம். ரத்தினவேலு நாயகர் வைஸ் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## அம்பா சமுத்திரம்.

8.11-34 காலை 12 மணிக்கு பஞ்சாயத்துபோர்டு கட்டிடத்தில் டெம்பரரி தலைவர் திரு. திருமலை செட்டியார் தலைமையின் கீழ் ஆரம்பமாகியது. பிறகு எல்லோரும் ராஜவிசுவாச பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள். பிறகு பிரசிடெண்டு ஸ்தானத்திற்கு திரு சி.எஸ். ராமச்சந்திரஐயரும், திரு. ஆர். வேலாயுத முதலியாரும் நின்றார்கள். பிறகு ஓட்டெடுக்கப்பட்டதில் திரு. ஆர். வேலாயுத முதலியாருக்கு ஒப்பனோட்டாக 10 திரு. சி. எஸ், ராமச்சந்திர ஐயருக்கு 5 ஓட்டுகளும் கிடைக்கவே, திரு. ஆர். வேலாயுத முதலியாரை பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிறகு 3 மணிக்கு வைஸ்பிரசிடெண்டு தேர்தல் ஆரம்பமாகியது திரு. ஏ. ஆர். எம். வேலாயுத முதலியார் அதிக ஓட்டுகளால் வைஸ்பிரசிடெண்டாகத்தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## கோவில்பட்டி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் தலைவர் தேர்தல் 6-11-44ந் தேதி நடைபெற்றது. அதில் தோழர் சங்கரலிங்க ரெட்டியார் B. A., B. L., போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டது. அன்று காலை 10 மணிக்கு நடந்த வைஸ் பிரசிடெண்டு தேர்தலில் தோழர் மாரியப்ப செட்டியார் அதிக ஓட்டுகள் பெற்று வைஸ்பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## ஓர் திருத்தம்

சென்ற வாரப் "பகுத்தறிவு" பக்கம் 7ல் "தென்னாட்டில் பெண்கள் நிலை" என்னும் கட்டுரையின் முதற் பத்தி 2-வது பாரா 24-வது வரியில் "பாவித்து" என்றிருப்பதை "பாராது" என்றும், 2-வது பத்தி 3-வது வரியில் "விடுதலை" என்றிருப்பதை "தலைவிதி" என்றும் திருத்தி வாசித்துக்கொள்க.

(ப—ர்)

## மற்றுமொரு தொல்லை.

மதங்களின் பெயரால்—கடவுளின் பெயரால்—ஜாதிகளின் பெயரால் மனிதனை மனிதன் பிய்த்துப்பிடுங்கித் தின்னும் இந்நாட்டில்—ஒரு கவளம் சோற்றுக்கு வழியின்றி எச்சிக்கல்லை நாயோடு சண்டைபோட்டுழலும் ஏழை மக்கள் பல்லாயிரக்கணக்காயுள்ள இந்நாட்டில் மதசம்மந்தமான—தெய்வசம்மந்தமான ஆடம்பரத்தொல்லைகள் வாரம்தோறும் மாதம் தோறும் வந்துகொண்டுள்ளன. தீபாவளித்தொல்லை வந்து இன்னுந்தீர்ந்த பாடில்லை. முதலாளிகளின் கோடியாடைகளின்னும் மழுங்க வில்லை. பலகாரபக்ஷணங்களின் மப்பு மந்தாரம் இன்னும் வெளியாகவில்லை.

மயிலாடுவதைக் கண்டு கோழியாடிய மாதிரி தாமும் அம் முதலாளிகளைப் பின்பற்றி இமிடேஷன் கொண்டாட்டம் நடத்திய ஏழைகள், கூலிகள், 'அடிமைகள், பாட்டாளி மக்கள் அதனால் பட்டகடன் தொல்லைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

இந்த லக்ஷணத்தில் "கார்த்திகை தீபம்" என்று மற்றொரு தொல்லையும் சமீபத்தில் வந்து விட்டது. தீபாவளித் தொல்லையாவது இருந்த இடத்திலேயே மக்களைப் பிடித்தாட்டிவிட்டு போய்விட்டது.

இதுவோ (அண்ணாமலை தீபமோ) கடவுளே (சிவன்) ஜோதிமயமாகக் கிளம்புகிறாரென்பதாக அண்ணாமலை மண்திடலுச்சியில் பெரிய கொப்பரையில் குடம் குடமான நெய்யும், ஆயிரக்கணக்கான ஜவுளிகளும் போட்டு பயித்தியக்காரத் தனமாகத் தீயை வைத்துவிட்டு அந்த நெருப்பு கொழுந்து விட்டெரிவதைப் பார்த்து அரகரா சிவசிவா என்று கன்னத்திலும், கண்ணிலும் அடித்துக் கொள்வதும், அதன் சாம்பலையும்' குழம்பையும் எடுத்துப் பூசிக்கொள்வதும் போனவர்களெல்லாம் நெய்யையும், ஜவுளிகளையும், குடங்குடமாக, மூட்டை மூட்டையாகக்கொப்பரையில் கொட்டி நெருப்புக்கிரையாக்கி திருப்தியடைவதுமான களியாட்டத்தைக் காண 20, 30, 50, 100, செலவழித்துக் கொண்டுபோய் அண்ணாமலையென்னும் மண் திடலையும், அதன் உச்சியிலெரியும் நெருப்பையும் ஜோதி மயமான கடவுளென்று வணங்கி ஆகாயவிமான சகாப்தமாகிய இந்த 20.ம் நூற்றாண்டிலும் நம்பிக்கொண்டும் திருவண்ணாமலை தீபம், கார்த்திகை தீபம், திருப்பரங்குன்றம் பெரிய கார்த்திகை தீபத்திருவிழா, என்றெல்லாம் மக்கள் பாமரத்தன்மையாய் பிதற்றிக் கொண்டும் திரிவார்களானால் இவர்களுக்கு எக்காலந்தான் விமோசன மென்பது விளங்கவில்லை.

மனிதன் முதல் முதலாகநெருப்பைக் கண்டு பிடித்த காலத்தில் அக்காலக்காட்டுமிராண்டிகளுக்கு அது ஒரு தெய்வீகமாகத் தோன்றியிருக்கலாம்.

நெருப்பின்உதவியேயில்லாமல் ஒரு பொத்தானைத்தட்டினால் லக்ஷதீபம்போல் அதுவும்பட்டப் பகல் போலப்பிரகாசிக்கும் விளக்குகளைக் கண்டுபிடித்து அனுபவித்து வரும் விஞ்ஞான காலம் இது வென்பதைச் சிந்தித்து அத்தகைய காட்டு மிராண்டித்தனமான காரியங்களில் மக்கள் வீணாக ஈடுபட்டு அறிவையும், பொருளையும் காலத்தையும் பாழாக்காமல் இக்காலத்திய விஞ்ஞான விஷயங்களில் மூளையைச் செலுத்துவதுடன் இத்தகைய பாமரத்தனமான கார்த்திகை தீபம், திருவண்ணாமலை தீபம், திருப்பரங்குன்ற தீபம், சொக்கப்பான் கொளுத்தல் முதலிய தொல்லைகளை அறிவுள்ள மக்கள் விட்டொழிக்கு மாறு வேண்டிக்கொள்கிறோம்.

# நிர்வாண வாழ்க்கையில் உள்ள இன்பம்.

(இக்கட்டுரை நிர்வாண இயக்கத்தின் உண்மைகளை அறிய ஆவல்கொண்டு அச்சங்கங்களுக்கு நேரிற் சென்று அவ்வியக்கத்தின் மேன்மையையும் அவசியத்தையும் நன்கு அனுபவித்து உணர்ந்த ஓர் ஆசிரியரால் இக்கட்டுரை எழுதப்பட்டதாகும். நிர்வாண இயக்கத்திற்கும் நமது சுயமரியாதை இயக்கத்திற்கும் இன்று எவ்விதத் தொடர்புமில்லை "பகுத்தறிவை" ஆயுதமாகக்கொண்ட நமது இயக்கத்தோழர்கள் மேல்நாட்டுப் புதிய இயக்கங்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் அதன் கொள்கை, அமைப்பு, பிரசாரமுறை, வளர்ச்சி முதலியவைகளைப்பற்றியும் அவசியம் அறிந்திருக்கவேண்டும் என்ற கருத்துடனே தான் இக்கட்டுரையும் இதைப்போன்ற பல கட்டுரைகளையும் வெளியிடுகின்றோம். (Navagar)

உலகிலுள்ள மக்களிற் பலர் நிர்வாணவாழ்க்கையின் அவசியத்தை உணர முடியாதவர்களாயும் அவ்வாழ்க்கையின் இன்பநிலையை எய்த முடியாதவர்களாயுமிருக்கின்றார்கள். என்னே! இயற்கைவளமலிந்த எழிலுறும் பூஞ்சோலையிலே, குளிர்ந்த தென்றற் காற்றினூடே குளிர்ந்த நீர் நிலைகளினருகே உள்ள மலைச்சரிவினிலே உலக ஆபாசங்களை மறந்து ஆண்களும்,பெண்களும்இயற்கை அழகுடன் நிர்வாணமாய் கூடிக் குலாவுவதும், தடாகங்களிலும் சமுத்திரங்களிலும் நீந்தி விளையாடுவதும், சூர்யஸ்நானஞ் செய்வதும், தேகாப்பியாசங்கள் செய்வதும் மனதிற்கு இன்பமும், சாந்தியும் ஊட்டுவதாயிருக்கிறது மனித வர்க்கத்தின் முற்போக்கையும்,நீண்டகால வாழ்க்கையையும் பெற்றுக்கொள்வதோடு மனிதர்கள் கர்மபித்தினின்று கடைத்தேறவும் விரும்பினால் கண்டிப்பாய் நிர்வாண வாழ்க்கையை அனுஸ்டித்தேயாக வேண்டும். மனித வாழ்க்கை பல பழக்கவழக்கங்களாலும், உலக பந்தங்களாலும் கட்டுப்படுத்தப்பட்டு நரக வாழ்க்கையாய் விட்டது. தற்போதைய அதிகமான உடற்கேட்டையும், பொருளாதார நஷ்டத்தையும் அசௌகரியத்தையும் அடைந்து வரும் மனித உலகம் விரைவில் நிர்வாண வாழ்க்கையை மேற்கொள்ளப்போகிறது என்று நிர்வாணிகள் நம்புகின்றார்கள்.

இளவேனிற்காலத்தேஓர் நாள் நானும் எனதுதோழனும்(ஓர்பெண்ணும்) எங்கள் விடுமுறை நாளை மகிழ்ச்சியுடன் கழித்து விட்டு வரலாமென்று வேல்ஸ் மலைப்பிரதேசங்களுக்குப்போனோம்,எங்கு நோக்கினும் பெரிய குன்றுகள், அழகிய சோலைகள், நீர் நிறைத தடாகங்கள், சிறிய சிறிய நீர்வீழ்ச்சிகள், பச்சைப்பசேரென விளங்கும் பல பள்ளத்தாக்குகள் அக்குன்றுகளின் நடுவிலே கண்வர் இடத்திலே நிர்வாணிகள் விடுதி நிறுவப்பட்டிருப்பதையும் ஆங்கு பல்லோர் இயற்கையோடியைந்த இன்ப வாழ்க்கை நடத்துவதும், மனதைக்கவரும் காட்சியாயிருக்கும். நாங்கள் பிரயாணஞ் செய்து அக்காட்டின் அருகேயுள்ள நிர்வாணிகள்நிறை சிற்றூரில் தங்கி காலைக்கடனை முடித்து விட்டு இயற்கையழகின் இன்பத்தைப் பருக காட்டை நோக்கி நடந்தோம். ஆஹா! நாங்கள் ஆண்டு கண்ட காட்சியை என்னென மொழிவோம். எங்கு நோக்கினும், பச்சைக்கம்பளம் விரித்தாற் போன்ற பசுமையான புல்தரைகள், தெள்ளத்தெளிந்த தண்ணீர்த்தடாகங்கள்.

அதன் இருகரைகளிலும் பாய் விரித்தாற்போன்ற மணல் வெளிகள் அழகிய இனிய குரலோசையுடைய பக்ஷிகளின் கீதங்கள் ஆகிய இன்னோரன்ன காட்சிகள் எங்கள் மனதை விட்டு என்றும் அகல்வதற்குரிய தன்று. காலையிற் கல கலவெனப் பாயும் கான்யாறுகளில் குதித்து நீந்தி விளையாட வேண்டுமென்று எங்கட்குத் தானகவே ஓர் உணர்ச்சியுண்டானது. உடல் பூரித்தது உள்ளம் நிர்மலமாய்—ஏன் சாந்தி பெற்று பரமானந்த இன்ப சாகரத்தில் அமிழ்ந்து விட்டது.

கான்யாறுகளின் கரைகளில் நீண்டு வளர்ந்து செழித்திருக்கும் மரங்களைப்பார்ப்பதே எங்கட்குப் பெரும் உள்ளக் கிளர்ச்சியுடனாக்கியது. அதன் கொம்புகளில் ஊஞ்சல் கட்டி ஆடுவது எங்கட்கு என்று மில்லா மகிழ்ச்சியைக் கொடுத்தது. எங்கள் மனஞ்சலிக்கும் வரை ஊஞ்சலாடினோம். எல்லாம் நிர்வாணமாகவேதான்! நாங்கள் மலைகளைக்கடந்து நடந்து சென்றது எங்கட்குப் போதிய தேகாப்பியாசமாகவே இருந்தது. நாங்கள் இந்த வனங்களில் கண்ட காட்சிகளோடு மட்டு மல்ல அவைகளெல்லாவற்றையும் கடந்து கடற்கரையையும் கண்டோம். அவ்வழகிய அலைகளின் சப்தம் எங்களை நோக்கி தோழர்களே! எனதுஇயற்கை அழகையும் பருக வரமாட்டீர்களா? என்று எங்களை அழைப்பதைப் போலிருந்தது. நானும் எனது தோழருமாக ஓர் சிறுபடகில்ஏறி உலாவச்சென்றோம். அப்பொழுது மாலைவேளை. சூரியகிரணம் எங்கள்மேல் வீழ்வதும், கடற்காற்று வீசுவதும் எங்கள் உடலைப்புளகாங்கிதம் அடையச் செய்தன. இவ்வாறு பலநாட்கள் சமுத்திரத்திலே படகுகளில் ஏறி உலாவிவருதுண்டு. ஓர் பௌர்ணமிதினம் வழக்கம் போல் மாலையில் படகிலேறிச் சென்றோம். படகுவேகமாய் ஊர்ந்து சென்றது. சூரியன் மறைந்தான், சந்திரன் தோன்றினான். மேல்புரத்தின் செவ்வானம் எங்கள் இன்ப உணர்ச்சிகளைத்தட்டி எழுப்பின. நாங்கள் மிகுந்த குதூகலத்துடன். தண்டை வலித்தோம். ஆனால் கரையோ, மலையோ கண்ணில் தோன்றவில்லை. நாங்கள் நீண்ட நேரம் படகையோட்டினோம். கரையைநோக்கிப் படகை யோட்டுகின்றோமா? அல்லது நடுச்சமுத்திரத்திற்குள்படகையோட்டுகின்றோமா? என்பது கூட எங்களுக்குத் தெரியவில்லை. நல்லவேளையாக அன்றுகடல் கொந்தளிப்பில்லை. அமைதியாயிருந்தது. சந்திரன் தனதுபூரண கலைகளுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வானம் நிர்மலமாய் விளங்கியது. நிலவின் வெளிச்சமும் நிர்மலவானமும் எங்கட்குப் பெரிதும் பயமூட்டியது. ஒருவாறு தைர்யத்துடன் படகைச் செலுத்திக் கொண்டே சென்றோம். திடீரென்று புதிதான ஓர் இடத்திற்கு வந்தோம். காலமோ நள்ளிரவு. இடமோ மனித சஞ்சாரமற்ற பூமி. ஆனால் அங்கு மனிதர்கள் வசியாவிடினும் எங்களின்தோழர்களே (நிர்வாணமான மிருகங்களே) யன்றிப்பகைவர்களில்லை. பரந்த நிலவின் பிரகாசத்திலே பசுமரத்தடியிலே சுகமாகப் படுத்து களைப்பால் கண் அயர்ந்தோம். இரவு முழுதும் சுத்தமான காற்றை நுகர்ந்து கம்பீரமாகவிடியற்காலையில்எழுந்தோம். சுற்றிலும் பார்த்தோம். முற்றிலும் புதியதாகவே தோன்றிற்று. நன்றாய் ஆராய்ந்தபின் அஃது ஓர் தீவு என்று உணர்ந்தோம். ஆங்குள்ள காட்டு மிருகங்கள் எங்களைக்கண்டு ஒரு சிறிதும் பயப்படவில்லை. அவ்வாறு அவைகள் பயப்படாது நிற்பதின் காரணம் ஒன்றும் எங்கட்குப் புலப்படவில்லை. ஓர் சமயம் நாங்கள் நிர்வாணமாய் இருப்பதால் எங்களையும் தங்களின் உற்ற நண்பனாக நினைத்துக் கொண்டன போலும். இயற்கையோடு ஈடுபட்டநாங்கள் மீண்டும் பிரயாணமாக வேல்ஸ் நாட்டின்கடற்கரையடைந்தோம்.

கடலிற்குதித்து விளையாடினோம். ஊஞ்சலில் ஆடி மகிழ்ந்தோம். இயற்கை அழகின் இன்பத்தைப் பருகினோம். மலை அருவிகளே எங்கள் தோழன். நீர்த்தடாகங்களே எங்கள் இல்லம். மரநிழலே நாங்கள் ஓய்வுநாளைக் கழிக்கும்அரண்மனை. மணற்பாங்கான சமவெளிகளில் ஓடி ஆடிநர்த்தனம் புரிவதே எங்கள் ஆசை. இதுவே எங்கள் நிர்வாண வாழ்க்கையின் லட்சியம்.

அந்தோ! எங்கள் விடுநாட்கள் கழிந்தன. எங்கள்தொழில்எங்களை விரைவில் வந்துசேர்க! சேர்க!! என அழைத்தது. மீண்டுஉடைகளையணிந்தோம். அவைகள் அதிகபாரமாய் இருந்தன. ஆனாலும் என்செய்வது. சுமந்தே தொலைக்கவேண்டியதுஏற்பட்டது. அடுத்த விடுமுறை நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

---

(6ம் பக்கத்தொடர்ச்சி)

க்ரடேரியட், புதிய டில்லி," என்றவிலாசத்துக்கு ரிஜிஸ்டர் கவரில் அனுப்பவேண்டும். போட்டியில் கலந்து கொள்கிறவரின் பெயரையும் விலாசத்தையும் கீழேயோ அல்லது கூட ஒரு கவரில் வைத்தோ அனுப்பலாம். டிசம்பர் 31ந் தேதிக்குப் பிறகு வரும் வியாஸங்கள் கவனிக்கப்பட மாட்டா.

போட்டிக்கு வரும் வியாசங்களில் எதுவும், பரிசு கொடுக்கத்தக்கதல்ல என்று கமிட்டியாருக்குத் தென்பட்டால், கமிட்டியார் யாருக்குமே பரிசு கொடுக்காமலிருக்கலாம்.

பொதுவுடமைக் கொள்கையை நசுக்குவதற்கு சர்க்கார் நாசூக்கான சில புது வழிகளைக் கடைப்பிடிப்பதாகத் தெரிகிறது.

(தினமணி)

(5 ம் பக்கத்தொடர்ச்சி)

சிவரையில் அநுசரித்தே தீரவேண்டுமென்ற உறுதியால் நான் அதற்கு உடன்பட வில்லை. அது பற்றி தோழர் விஜய ராகவாச்சாரியார் என்னை வைபத்தியக்காரனென்று கூறினர். வெளி வேஷத்திற்காகவே அதில் சம்பாதிக்கவோ நான் காங்கிஸ் வாதியாகவிருக்கவில்லை. இப்பொழுதுஎன் மீதுகுறை கூறுவோர்களிடமிருந்தெல்லாம் நான் அப்பொழுது உயர்ந்த நற்சாட்சி பத்திரங்கள் வாங்கி யிருக்கிறேன்- நான் இந்த காங்கிரஸ வாதிகளுக்கு அடிமை போலவும் அவர்களது சொல்லைத்தவராமலும் நடந்து, பலன் உண்டாவென்பதை பரீட்சித்துப் பார்த்தவன். காங்கிரஸ் நிர்வாகம் ஒரு சமூகத்தாரின் நன்மையைக்குறித்தே நடக்கிறதென்பதை உணர்ந்தேதான் அதிலிருந்து விலகினேன். எனக்கு அதில் மதிப்போ யோக்கியதையோ இல்லை யென்று நான் விலகவில்லை. காங்கிரசுக்குஅதிகாரம்ஏற்படுமானல்பொதுஜனங்களுக்கு,என்னபங்கு ஏற்படுமென்பதைத் திட்டப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று காஞ்சீபுரத்தில் நடந்த காங்கிரஸ் மகா நாட்டில் நான் தீர்மானம் கொண்டுவரவே இடமில்லாதபடி செய்தனர். காங்கிரஸில் நியாயத்திற்கு இடமில்லை யென்றும் தந்திரத்திற்கே இடமுண்டென்றும் உணர்ந்து நான் ஆரியா முதலியவர்களுடன் மகா நாட்டிலிருந்து வெளியேறினேன். அதன் பிறகு தான் காங்கிரஸையே தொலைக்க வேண்டுமென்ற ஊக்கம் ஏற்பட்டது. ஆனல் தற்போது காந்தியார் காங்கிரஸிலிருந்துவிலகி விட்டதனல் காங்கிரஸைதொலைக்க வேண்டுமென்றவிருப்பமே எனக்கில்லை. ஏனென்ருல் இனி பார்ப்பனருக்கு சிபார்சுக்கு அங்கு ஆளில்லை. காஞ்சிபுரம் மகாநாட்டிலிருந்து விலகிய பிறகு நான் ஜஸ்டிஸ் - கட்சியை ஆதரித்தேன். இந்த கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கிறது. வகுப்புவாரி பிரதிநிதித்துவமே கூடாதென்று காங்கிரஸ் மகாசபை கங்கணம் கட்டிக்கொண்டதால்தான் அது தற்போது சீர் குலைந்து விட்டது சிறுபான்மை யோருக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு அவர்கள் விலக வேண்டியதாயிற்று. அதுவே காங்கிரஸின் பலக்குறைவுக்குக் காரணம். எல்லாவகுப்பாருக்கும்சமநீதிவழங்க காங்கிரஸ் ஒருப்படுமானல் தனிப்பட்ட சமூக ஸ்தாபனங்களே தோன்றியிருக்காது. வண்டிக்கு முன் பாரம் அதிகமானல் பின்புறம் கற்களைத் தூக்கி வைப்பது போலவே பிராமணரல்லாதாரில் சிலரை உபயோகித்து வருகின்றனர். (கரகோஷம்) ஒரு ஸ்தாபனத்தின் பெயரைச்சொல்லி ஓட்டு கேட்கும் போது, அந்த ஸ்தாபனத்தால் தேச மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்கள் என்ன வென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசிய மென்பது பற்றியே நான் இதைக் கூறுகின்றேன்.

### பிரசாரம் செய்யாத குறை.

ஜஸ்டிஸ் கட்சி தனது நோக்கங்களையும், வேலைத்திட்டத்தையும் சரியான பிரசாரத்தின் மூலம் ஜனங்களுக்கு அறிவிக்காததாலேயே இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சியைத் தேசத்துரோகக் கட்சியென்று பிராமணர்கள் குறை கூறுகின்றனர்.

### ஜஸ்டிஸ் கட்சி வேலை.

ஜஸ்டிஸ் கட்சி செய்துள்ள வேலை போல அக்கட்சி இல்லாத இதர மாகாணங்களில் வேலை நடந்திருக்கிறதாவென்று கேட்கின்றேன். ஜஸ்டிஸ் கட்சி இம்மாகாண மந்திரி சபையை ஏற்று அரசியல், சமுதாய அபிவிருத்திக்காகப் பாடுபட்டுள்ளது. புரோகித ஆதிக்கம் ஒழிந்து விவசாயிகள், பெண்கள் அரசியலில் கலந்து கொள்ள முடிந்தது. சென்னையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவற்றில் ஸ்தானமுண்டு. வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையும் அமுலிலிருக்கிறது. இதர மாகாணங்களில் இத்தகைய அபிவிருத்திகள் ஏற்படவே இல்லை. ஜஸ்டிஸ் கட்சி செய்த பிரதிகூலம் என்னவென்று நான் கேட்கின்றேன்.

### தொண்டர்களுக்கு தடியடி.

ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபையிருந்ததாலேயே சட்டமறுப்பு இயக்கம் நடந்தபோது இம்மாகாணத்தில் காங்கிரஸ் தொண்டர்களுக்கு தடியடி, சிறைவாசம் ஏற்பட்டதென்று காங்கிரஸ் பிரசாரகர்கள் குறை கூறுகின்றனர். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளில்லாத இதர மாகாணங்களில் தொண்டர்களுக்கு அதிகாரிகள் தேங்காய் பழம் கொடுத்தார்களா அல்லது கலியாணம் செய்து வைத்தார்களாவென்று நான் கேட்கின்றேன். (சிரிப்பு) கைதிகளுக்கு மோர் கொடுக்கவில்லையாதலால் ஜஸ்டிஸ் கட்சி நாசமாகப் போகவேண்டுமென்று கூறுகிறார்கள். வேறுஎந்தமாகாணத்திலாகிலும் சட்டமறுப்புகைதிகளுக்கு ஆடைத்தயிராக கொடுத்தார்களாவென்று நான் கேட்கின்றேன். ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த திவான்பகதூர் முதலியாரால் நெருப்பு பெட்டிக்கு வரி ஏற்பட்டதென்று கூறுவது எவ்வளவு இழிவானதென்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். சிலபெண்கள் அற்பத்தனமாக சச்சரவிடுவது போலல்லவா இருக்கிறது காங்கிரஸ் தேர்தல் பிரசாரம்.

காங்கிரசின் சார்பில் பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கானவர்கள்சிறைபட்டதால் கண்ட பலன் என்ன? அம்முறை தப்பானதென்று கண்டு பிடித்ததைத்தவிர வேறென்ன? இதற்காக ஆயிரக்கணக்கில் செலவு. "காந்தியார் தமது முயற்சி பிரயோஜனமற்றதென்று உணர்ந்து புது முயற்சியில் ஈடுபட உத்தேசித்திருப்பதைப் பாராட்டி "சுதேசமித்திரன்" பத்திரிகை தலையங்கம் எழுதியுள்ளது. காந்தியார் தமது கொள்கைகளை நம்பாமலே காங்கிரஸ் வாதிகள் வாசா கைங்கரியமாக நடந்து வருகின்றனரென்றும், காங்கிரஸிற்குப் பலமும் பரிசுத்தமும் ஏற்படும் பொருட்டு அதிலிருந்து விலகியதாகவும் கூறுகின்றார், உள்ளேயிருந்து காரியத்தைச் சாதிக்காமல் வெளியே இருந்து எப்படி காரியத்தைச் சாதிக்கக்கூடுமென்று நான் கேட்கின்றேன்.

### தேசத்துரோகி பட்டம்.

காங்கிரஸிலிருந்து விலகிய என்னைத் தேசத் துரோகி என்று கூறுகின்றனர். காந்தியார் காங்கிரஸிலிருந்து விலகி விட்டாரே, அவரைத் தேசத் துரோகியென்று கூருமல் அவர் பேரால் ஓட்டுக் கேட்கிருர்கள். காங்கிரஸ் பரிசுத்தமாக வேண்டுமென்று நானுந்தான் விரும்புகின்றேன். காங்கிரஸைச் சேராதவர்களெல்லாம் தேசத் துரோகிகளென்பது அயோக்கியத்தனமான வார்த்தையேயாகும்.

காங்கிரஸ் வேலைத் திட்டத்தை ஜனங்கள் நம்பி அநுசரித்தனர். உப்பு சத்யாக்ரகத்திலும் சேர்ந்து சிறைபட்டனர். இதனல் கண்ட பலன் என்ன? சிறைபட்டவர்களை விடுதலை செய்ய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதே தவிர வேறில்லை. இதற்காக ஜனங்கள் மீது குறை கூறி விட்டு காந்தியார் வெளியேறியது நாணயமாகாது.

### கோயிலை இடிப்பவன்!

தோழர் ராமசாமி முதலியார், காங்கிரஸ்வாதிகள் கூறியதற்கெல்லாம் தக்க பதில் கூறிய பிறகு காங்கிரஸ் வாதிகள் நூதன பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். நான் கோயிலை இடிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்கிறவனென்றும், அத்தகையவன் உதவியை நாடும் தோழர் முதலியாருக்கு ஓட்டு போட வேண்டாமென்றும் கூறுகின்றனர். கோயிலை இடிப்பதால் கடவுளுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமா? அக்கோயில்களால் வயிறு வளர்க்கும் கூட்டத்தார் வாயில் மண் விழுமே தவிர வேறில்லை (சிரிப்பு) ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு கோடிக்கணக்கில் ஆடம்பரச் செலவு செய்வதை மிக்க பிரயோஜனகரமான முறையில் உபயோகிக்கலாமென்பதே எனது கவலை.

### உணர்ச்சி வேண்டும்.

உங்களுக்கு உணர்ச்சி வேண்டும். தோழர் முதலியார் பிராமணரல்லாதார். அவருக்கு ஏற்படும் பெருமை உங்களுக்கும் உரியதாகும். நமக்கு ஏதாகிலும் காரியம் கிறைவேற வேண்டுமானல், இத்தகையவர்களாலே தான் அது சாத்தியமாக வேண்டும்.

### சமூக சீர்திருத்தத்தின் அவசியம்.

நமது சமுதாயத்தில் ஆபாசங்கள் நிறைந்திருக்கின்றன. சீர்திருத்தமே பிரதானமாகும். அதற்குச் சாதகமாக வேலை செய்வோரை ஆதரிக்க வேண்டுவது நமது கடமை. சமுதாயத்தில் உயர்வு தாழ்வு அகலவேண்டும். வெள்ளையர் ஆட்சி மட்டும் ஒழிந்தால் போதாது. சமத்துவம் ஏற்பட வேண்டும்.

### தாலி அறுத்ததாக பழி.

காங்கிரஸ் பிரசாரகர்கள் நாணயமற்றவர்களாகவிருக்கின்றனர். காங்கிரஸ் போர்வையை உடுத்திக்கொண்டவர்களுக்கு பொய் பித்தலாட்டம் செய்ய லைசென்ஸ் ஏற்பட்டுள்ளது. சத்யாக்ரகம் செய்த ஒரு பெண்ணின் தாலியை தோழர் ராமசாமி முதலியார் அறுத்தாரென்றும் வீண் பழி கூறுகின்றனர். பாமர ஜனங்களை இவ்விதம் ஏமாற்றி ஓட்டு பெற விரும்புகின்றனர். காங்கிரஸ் வாதிகளின் புரட்டுக்கு பிராமணரல்லாதார் அஞ்சாமல் வேலை செய்து வெற்றி பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (கரகோஷம்)

பின் தோழர் எ. ராமசாமி முதலியார் பேசினர் பின் தலைவர் முடிவுரை கூறிய பின் கூட்டம் இனிது கலைந்தது. (தமிழ்நாடு)

---

## ஓர் வேண்டுகோள்.

தென்னாட்டு ரெட்டி சமூகத்தில் முதன் முதலாக விதவா விவாகம் செய்து கொள்ளத்துணிந்து முன் வந்து, சென்ற மே மாதம் 9ந்தேதி இராமநாதபுரம்ஜில்லா அறுப்புக்கோட்டைத்தாலூகா கல்லூரணி போஸ்டைச்சேர்ந்த சவ்வாசுபுரம் கிராமம் தோழர் சுப்பாரெட்டியார் அவர்களை மணம் செய்துகொண்ட வீரப்பெண்மணி தோழர் (ஷையூர்) சுப்பம்மாளவர்கள் கருப்பம் தாங்கிப்பிரசவிக்கும் காலம்சமீபத்திலிருக்கிறபடியால், விதவாவிவாக காரணமாகஅவர்களுக்கு பந்துக்களின் உதவியில்லாதபடியினலும், ஷை தம்பதிகள் ஏழைகளானபடியினலும் விதவாவிவாக விஷயத்தில் அனுதாபமுள்ள தோழர்கள் இயன்ற பொருளுவி செய்து அவருடைய பிரசவ காலம் சௌகரியமுள்ளதாய்இருக்கச் செய்யுமாறு வேண்டிக்கொள்வதுடன் உதவும் பொருளை ஷை சவ்வாசுபுரம் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு தோழர் எஸ். என். ஜான் ரெட்டியாரவர்கள் விலாசத்திற்கனுப்பும்படி வேண்டுகிறேன்.

இங்ஙனம் தி. அ. வேங்கடசாமி,
"பகுத்தறிவு" ஈரோடு 11—11—34

---

## பறிமுதல்

நான் நாஸ்திகன் ஏன்? என்னும் புஸ்தகம் பறிமுதல் செய்யப்பட்டு விட்டதால் அவை முழுவதும் போலீசாரால் கைப் பற்றப்பட்டு விட்டது.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

திரத்தை யொத்த, ஒருவித சரித்திரம் இருந்து வந்தது. இந்தியாவில் புத்தரும், சீனாவில் கோங். பு. சி. என்பவரும், மனிதரின் கவனம், மனிதவர்க்கப் பிரச்னைகளிலேயே அதிகம் செல்லவேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். "ஏதேனும் தெய்வீக விஷயங்களிருந்தால் அவைகளைப் புறக்கணித்துவிட வேண்டும்" என்றும் அவர்கள் எடுத்துரைத்து வந்தார்கள். ஆனால் பொது ஜனங்களிடையில் அவர்களுக்கு நிரந்தரமான செல்வாக்கு இல்லாமற் போய்விட்டது. பண்டு கிரீஸிலும், ரோமாபுரியிலும் இப்படித்தான் நிகழ்ந்தது. தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் மதத்தை யொழிக்கும் புரட்சி இயக்கத்தைப்போல், மிகப்பிரதானமான வேறு எந்த இயக்கமும் சரித்திரத்தில் இதற்கு முன்பு ஏற்பட்டதில்லை.

"ஆகையினால் உலக மக்கள் யாவருமே கடைசியாகத் தங்களுடைய மதங்களின் பொய்மையைக்கண்டு கொண்டார்கள்" என்று கிறிஸ்வதர்கள் விரைந்துரைக்கிறார்கள். "இப்போது கிறிஸ்து மதத்தின் முறையாகும்."

கோவில்களின் பிரசங்க பீடங்களிலிருந்து, மெய்யான விஷயங்களைப் புகட்டுவதற்குப் பதிலாக, சமயோஜித சாதுர்ய வார்த்தைகளால் கள்ள நியாயம் பொருந்திய நம்பிக்கை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவப் பாதிரிமார்களால், பிறமதக்காரர்களிடம் எவ்வித முன்னேற்றமும் உண்டாக்க முடிவதில்லை என்பதைப் பற்றி பின்பு விளக்குவோம்.

இந்தப் பாதிரிக் கூட்டத்தார் சீனர்களிடத்திலும், ஸுலூ ஜாதியாரிடத்திலும், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரணமானார் என்று பிரசங்க மாரிபொழிந்து கொண்டிருக்கையில், கிறிஸ்துவமதம் பரவி யுள்ள நாட்டின் எல்லையைச் சேர்ந்தவர்களில், லட்சம் லட்சமாகக் கிறிஸ்துவின் விஷயம் தங்களுக்கு வேண்டாமென்று மறுத்துக்கொண்டுவருகிறார்கள். இவ்விஷத்தைப் பாதிரிமார்கள் மிகப் பயங்கரமானதாகக்கருதுகின்றார்கள்.

இதற்கு ருசு ஏதேனும் அவசியப்பட்டால், மத விஷயமான புள்ளி விபரங்களைக் கொண்ட மற்றொரு வெளியீட்டில் விளக்குவோம். இங்கு சிலவிஷயங்களைப் பற்றிமாத்திரம் கூறினால் போதுமானதாகும். முதலில் நாம் அமெரிக்க ஐக்கிய நாடுகளைப்பற்றி ஆராய்வோம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் பற்றிய "மத விஷயமான புள்ளிகளில்" ஒன்றுக்கொன்று முரணாகஇருக்கும் அநேக விபரங்கள்என்னிடம் இருக்கின்றன. இப்புள்ளி விபரங்கள் ஐக்கிய சர்க்கார் அதிகாரிகளால் வெளியிடப்பட்டபோது, அவ்விபரங்களைக் கோவில் அதிகாரிகளே கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மரியாதையாகச் சொல்ல வேண்டுமானால் அப்புள்ளி விபரங்கள்எல்லாம் நன்மையைக் குறிக்க வேஏற்பட்டவைஎனலாம்.

கிறிஸ்துவத் திருச்சபைகளில் ஒவ்வொரு அங்கத்தினரும் சந்தேகத்தோடேயே எண்ணிக்கையில் சேர்த்துவைத்துக் கொள்ளப்படுகிறார். அங்ஙனமே திருச்சபை அங்கத்தினர் ஸ்தானத்திலிருந்து விலகிக்கொள்ளும் ஒவ்வொருவரையும் கணக்கிலிருந்து எடுத்து விடுகிறார்களா? அப்படிச் செய்யும்படி நான் கட்டாயப்படுத்தவில்லை, வாசகர்கள் தங்கள் இஷ்டம்போல் அவ்விஷயத்தைப்பற்றி முடிவுகட்டிக் கொள்ளலாம்.

என்னிடத்தில் மிக உயர்ந்த பிரமாணங்களாக மூன்று பிரிவானபுள்ளிவிபரங்கள் இருக்கின்றன. இப்போது எடுத்துக்கொள்ளப்பட்ட என் காரியத்திற்கு அவை போதுமானவை. ஜனக்கணித சங்கத்தார் (Thc Bureau of Census) 1916.ம் வருஷத்தில் கிறிஸ்துவத்திருச்சபைகளின் மொத்தஅங்கத்தினர்கள் 41,926,854 என்று ஒரு புள்ளி கொடுத்திருக்கிறார்கள். கிறிஸ்துவக்கோவில்களின் ஐக்கிய சபையார் (The Federal Couucil of Churches) 1923-ம் வருஷத்தில் மொத்த அங்கத்தினர்கள் 48,224,04 என்றுஒரு புள்ளிவிபரம் கொடுத்திருக்கிறார்கள். கிறிஸ்துவத்தூதன்(ChristianHerald) என்னும் பத்திரிகை 1925.வது வருஷத்தில் எல்லாக்கிறிஸ்துவத்திருச்சபைகளின் அங்கத்தினர்களும் சுமார் 28,000,000 என்று சொல்லுகிறது. இதோடு குழந்தைகளையும் சேர்த்தால் சுமார் 45,000000க்கு வருகிறது. இப்புள்ளிகளின் நுட்பமான ஆராய்ச்சிகளைமறு வெளியீட்டுக் குவைத்துக் கொண்டாலும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் கோவிலுக்குப் போகக் கூடியவர்கள் சுமார் 50,000,000 இருக்கலாம்.

நன்மையை நாடி, இந்த எண்ணை, ஒரு முழு எண்ணாகவைத்துக்கொள்வோம். ஜனத்தொகை 110,000,000. புறம்பே நிற்கும் 60,000,000 அமெரிக்கர்களும் உண்மையான கிறிஸ்துவர்கள்தான். நீங்களும் அப்படித்தான் நினைப்பீர்கள். ஆனால் அவர்கள் கடவுளை வழிபட வேண்டியது அவசியமென்று நீங்கள் நினைக்க வேண்டாம். நானும் அப்படி நினைத்துவிடவுங்கூடாது. ஆனால் நீங்களே அவர்களைக் கேளுங்கள். அவர்கள் உங்களுடைய அயலார்கள்தான்.

கிறிஸ்துவத்திருச்சபை அங்கத்தினர்களைப்பற்றி, சர்க்கார் ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் வெகு ருசிகரமானவை. நியூயார்க், பென்சில்வேனியா, முதலிய மிகப்பெரிய நகரங்கள், அலபாமா,ஜியார்ஜியா, கெண்டக்கி முதலிய ஊர்களைப் போல் அவ்வளவுமதப்பற்று உடையனவல்ல. கிறிஸ்துவத்திருச்சபை அங்கத்தினர்களைக் காட்டும் புள்ளி விவரத்தில் கருப்பு மனிதர்களின் ஜனத்தொகை முழுவதும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வெள்ளையர் கூட்டங்களிலிருந்து பாதிக்கு மேல் ஒரு போதும் கோவிலுக்குப் போவதேயில்லை. நகரங்களில் மூன்றில் இரண்டு பங்கு முதல், நான்கில் மூன்று பங்கு ஜனங்கள் வரையில் கோவிலுக்குப் போவதில்லை.

பேராசிரியர் லியுபா என்பார் ஏனைய பேராசிரியர்களுடைய நம்பிக்கைகளைப்பற்றியும், மாணாக்கர்களுடைய நம்பிக்கைகளைப்பற்றியும் ஆராய்ச்சிப் பிரமாணங்கள் வெளியிட்டிருக்கிறார். அவர் கொடுத்திருக்கும் புள்ளிகளோடு மேலே விவரிக்கப்பட்டிருக்கும் புள்ளிகளைவைத்து ஒத்துப்பார்க்கும் போது, நிகழ்காலத்தைப்பற்றியும், எதிர்காலத்தைப்பற்றியும் ருசிகரமான பல உண்மை விஷயங்கள் தோன்றுகின்றன. அஞ்ஞானத்தில் அமிழ்ந்து கிடக்கும் பட்டணங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், அநேகமாய் ஒவ்வொருவரும் கிறிஸ்துவக் கோவிலுக்குப் போகிறார்கள். நகரங்களிலும், சர்வ கலா சாலைகளிலும் உள்ளவர்கள் விழிப்படைந்து வருகிறார்கள். அவர்கள் பெறும் அறிவுப்பெருக்கத்துக்குரிய சாதனங்களுக்கேற்ப, அவர்களுடைய மத நம்பிக்கைகள் தேய்ந்து மாய்ந்து வருகின்றன. மிக உயர்ந்த அளவில் அபிவிருத்தியடைந்திருக்கும் அமெரிக்கர்களில் ஐந்தில் நான்குபாகம் வெகு முக்கியமான மதநம்பிக்கைகளை மறுக்கிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாட்டில் உயர் தரக்கல்வியோ, ஞானமோ, பரவிவருகிறதா? அப்படியானால் அதன் முடிவு என்னவாகும்?

ஆம், எனக்குத்தெரியும். இவ்விடத்தில், கிறிஸ்துவக்கோவில்களினால் தக்க பலன் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம், கல்வியின் பொருட்டு, விசேஷமாய் விஞ்ஞானக்கலையின் பொருட்டு, நாம் செய்யும் ஏராளமான செலவுதான். (ஆகையால், கல்வி வளர, வளர மதம் அழிந்து வருகிறது.) ஆனால் இது அமெரிக்காவுக்குரிய விசேஷ நிலைமை. இதை விடுத்து நாம் வேறு வகையில் கவனிப்போம். பிரிட்டிஷ் விட்டேகர்ஸ் (பஞ்சாங்கம்) அல்மானெக் பின்வருமாறு கூறுகிறது "கிரேட் பிரிட்டனிலும் அயர்லாந்திலும் உள்ள குடிகளில் அநேகமாக யாவரும் கிறிஸ்தவர்கள்தான். அவர்களில் சுமார் 300' 000 யூதர்களும், அங்கு வந்து குடியேறியிருக்கும் ஒரு சிறு தொகையினரும் தான் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள். பின்னர், பிரான்ஸ் தேசம் இருக்கிறது அங்கு, 38,000,000 சரியான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அங்ஙனமே இன்னும் பல விடங்கள் இருக்கின்றன. நாம் அமெரிக்காவை அவைகளுக்கு சமமாகக் கொண்டு வந்து விடலாம்." என்று அமெரிக்கக் கிறிஸ்தவர் துக்கத்தோடு சொல்லுகிறார்.

தோழர்களே! அமெரிக்காவும், அவைகளுக்குச் சரிநிகராக வந்துவிடும். ஏனென்றால், பிரிட்டனிலும், பிரான்ஸிலும் பகுத்தறிவு வாதிகளாகிய நாஸ்திகர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்காவிலிருப்பவர்களைப் பார்க்கிலும் அதிகம். பிரிட்டனைவிட, பிரான்ஸில்தான் நாஸ்திகர் எண்ணிக்கை ஜாஸ்தி.

இங்கிலாந்தின் ஜனத்தொகையின் சுமார் கால் பாகம், கிறிஸ்துவமதத்தின் பிரதம குருவாழும் லண்டன் மாநகரில் இருக்கிறார்கள். அந்த 90-லட்சம் பேர் வசித்து வருகிறார்கள். லண்டனில் கோவிலுக்குப் போகிறவர்களின் எண்ணிக்கை இரண்டு தடவை எடுக்கப்பட்டிருக்கிறது. அக்கணக்கு, மற்றக்கணக்குகளைப்போல், மிகச்சாதுரியமாகவே சேகரிக்கப்பட்டிருக்கிறது. தெய்வபக்திபுள்ள ஒருவர் தான், காரியஸ்தராக இருந்து அவ்வேலையை முடித்துக்கொடுத்தார். லண்டன் நகரத்தில் வசிக்கும் 90-லட்சம் பேர்களில் ஏறக்குறைய 10-லட்சம் பேர்கள் தான், ஜபாலயத்திற்கோ கோவில்களுக்கோ போகிறார்களென்று நாம் நிச்சயமாய் அறிவோம்.

(தொடரும்)

## ஈரோடு சேர்மென் எலக்ஷன்

இம்மாதம் 15ம் தேதி வியாழக்கிழமை மாலை 5—15 மணிக்கு ஈரோடு முனிஸிபல் கவுன்ஸில் ஹாலில் ஷை கவுன்ஸிலின் சேர்மென் அவர்களின் எலெக்ஷன் நடைபெறுவதற்காக கவுன்ஸிலின் ஸ்பெஸல் மீட்டிங் ஒன்று கூட்டப்படும் என ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் தெரிவிக்கிறார்.

## சென்னை மாகாண இரண்டாவது நாஸ்திகர் மகாநாடு.

இம்மகாநாடு நாளது டிசம்பர் மாத இறுதியில் அல்லது ஜனவரி மாத முதல் வாரத்தில் சென்னையில் நடைபெறும். அதற்கு வேண்டியசகல முயற்சிகளும் செய்யப்பட்டு வருகிறது. மற்ற விபரங்கள் முறையே வெளியிடப்படும்.

இங்ஙனம்
ப. ஜீவானந்தன்
T. N. ராமன்
அ. பொன்னம்பலம்
காரியதரிசிகள்.
(சென்னை 2-11-34)

## பகுத்தறிவு வாசகசாலை திறப்புவிழா.

ஷை வாசகசாலை திறப்பு விழா 20-10-34ந்தேதி சனிக்கிழமை மாலை 4மணிக்கு சென்னை நாட்டுப்பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள 65-66வது நெம்பர் கட்டிடத்தில் "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் அவர்கள் தலைமையில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். அதுசமயம்:— தோழர்கள் எஸ். குருசாமி பி. ஏ., டாக்டர் மே. மாசிலாமணி முதலியார், கே. வி. அழகர்சாமி, டி. வி. சுப்பிரமணியம், பண்டித. எல். எஸ். அருணகிரிநாதர், சி. தங்கராஜ், ஜி. பொன்னுரங்கம், சி. பி. சரவணம், டி. சம்பந்தம், எஸ். ரங்கநாதன், எம்.எஸ். முத்து, டி. ராதாகிருஷ்ணன், கே. எஸ். நாதன், எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி., எஸ். காந்தம் முதலியோர் தவிர சுமார் 200 பேருக்குமேல் விஜயம் செய்திருந்தனர்.

தோழர் எஸ். குருசாமி பி. ஏ. "பகுத்தறிவு" என்பது பற்றி பேசினார். பிறகு மாலை 6மணிக்கு மன்றத்தின் காரியதரிசி தோழர் டி. சம்பந்தம் அவர்களால் தோழர்கள் திரு. வி.கல்யாணசுந்திர முதலியாருக்கும், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கும் மலர்மாலை சூட்டப்பட்டு வந்தனோபசாரம் கூறப்பட்டு விழாமுடிவுற்றது. என நமது நிருபர் எழுதுகிறார்.

## சந்தேக விளக்கம்

கேள்வி:— செத்துப்போனவர்கள் எப்போது வருவார்கள்?

பதில்:— தேர்தல் காலத்தில் ஓட்டுப் போடுவதற்கு மாத்திரம் வருவார்கள்.

## ஆதி திராவிட மாணவர் சங்கக் கூட்டம்.

ஓமலூர் தாலூக்கா ஆதிதிராவிட கல்வி முன்னேற்றத்தைக் கருதி இம்மாதம் 3ந்தேதி பகல் 2 மணிக்கு ஓமலூர் வேலாசாமி செட்டியார் ஹைஸ்கூலில்ஷை கூட்டம் நடைபெற்றது. ஆதிதிராவிட மாணவர்களும் பெரியோர்களும் சுமார் 40 பேர்வரை கூடியிருந்தனர். ஷை கூட்டத்திற்கு சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்கா ஆதிதிராவிட மகாஜன சபை காரியதரிசியும், பஞ்சாயத்து ஸ்கூல்களின் ஆனரரி ஆர்கனைசரும், சப் ஜெயில் விசிட்டருமான தோழர் எ. சின்னசாமி தலைமை வகித்தார்.

தீர்மானங்கள்.

1. "ஷை சங்க விழாவை நாளது ஹூ டிசம்பர் மாதம் முதல் வாரம் நடத்தவும், அவ்விழாவிற்கு ஜில்லாபோர்டு எடுகேஷனல் ஆபீசர் தோழர் பி. சாம்பசிவம் பிள்ளை M. A., B. L., தலைமை வகிக்கும்படிக்கும், ஓமலூர் ரேஞ்சு ஸ்கூல்களின் டிப்டி இன்ஸ்பெக்டர் தோழர் ஆர். வைத்தியநாத ஐயர் B. A., L. T., திறந்து வைக்கும்படிக்கும் கேட்டுக் கொள்ளவும் வேண்டுமாக இச்சங்கம் தீர்மானிக்கிறது."

2. இச்சங்கத்தை ஒழுங்கு பெற நடத்தும் பொருட்டு மாணவராகிய தோழர் ஆர். எ. சித்தன் அவர்களை பிரசிடெண்டாகக் கொண்ட நிர்வாக சபையொன்று தெரிந்தெடுக்கப்பட்டு அதன் பின் சந்தன தாம்பூலம் வழங்கி வந்தன உபசாரத்துடன் மாலை 4 மணிக்கு கூட்டம் கலைந்தது எனக்காரியதரிசி எழுதுகிறார்.

## மதிப்புரை

### தொழிலாளர் கல்வி உலகம்.

சென்னை சேப்பாக்கம் தோழர் டி. ஜெ. ஆர். கோபால் அவர்களை ஆசிரியராகக்கொண்ட "தொழிலாளர் கல்வி உலகம்" என்னும் மாதமிருமுறை வெளியீட்டின் மலர்1, இதழ் 17 நமது பார்வைக்குக் கிடைத்தது.

தொழில் கல்வி, தொழிலாளர் முன்னேற்றம் ஆகியவைகளுக்குப் பாடு படுவதாக அதில் கண்டுள்ளது.

வருட சந்தா உள்ளூர் அணா 8.
" வெளியூர் அணா 12.
தனிப்பிரதி விலை காலணா.

## சுயமரியாதை இளைஞர் மன்றம்.

தீபாவளி பொதுக்கூட்டம்.

ஷை மன்றத்தின் ஆதரவில் 3-11-34ந்தேதி சனிக்கிழமை "வேணுகோபால் செட்டி பார்க்கில்" தீபாவளிப்பொதுக்கூட்டமொன்று தோழர் டி. ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம்:— தோழர் கே. எஸ். நாதன், எம் எஸ். முத்து, பி. சத்தியமூர்த்தி, சி. தங்கராஜ், ராஜு, வாலாஜா, வேலாயுதம் முதலியோர் "தீபாவளி" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்கள். இரவு 8மணிக்கு மன்றத்தின் காரியதரிசி தோழர் எஸ். ரங்கநாதன் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கடவுளைக் காட்ட முடியவில்லை.

குரு மீது சீஷர் வழக்கு.

தாக்கர் நிடார் சிங், ராதா சுவாமி கோஷ்டியைச் சேர்ந்தவர்; இவர் இந்தக் கோஷ்டியில் சேருமுன் ரூ. 50 சம்பளமுள்ள உத்தியோகத்திலிருந்து வந்தார். இவர், பிளஸ் நகரத்திலுள்ள அக் கோஷ்டித் தலைவரான பாய் சாவான் சிங் தனக்குக் கடவுளைக் காட்டுவதாகக் கூறியதனால் தான் வகித்து வந்த உத்தியோகத்தையும் விட்டு அக் கோஷ்டியில் தொண்டாற்றி வந்ததாகவும், அவர் தனக்குக் கடவுளைக் காட்டவேயில்லை யென்றும், ஆகவே, தனக்கு ஏற்பட்டுள்ள நஷ்ட ஈட்டுத் தொகை ரூ. 8000 மும் பாய் சாவான் சிங் தனக்குக் கொடுக்க வேண்டு மென உத்திரவிடுமாறு சப் கோர்ட்டில் ஒரு பாப்பர் வழக்குத் தொடுத்தார்.

வாதி பாப்பர் என மெய்ப்பிக்குமாறு கோர்ட்டார் கேட்டதற்கு, இதற்குசாக்ஷியாகப்பிரதிவாதியையேவாதி குறிப்பிட்டிருக்கின்றார். எனவே விசாரணையை 5-ம் தேதிக்குத் தள்ளி வைத்து, பிரதிவாதிக்கு சாக்ஷி சம்மன் பிறப்பித்திருக்கிறார்கள்.

## மலையாளம் சில்க்.

2½-வீதி. 5-கீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு " 14-0
ஷை 4½-கீளம் டஜன் 1-க்கு " 10-0
3-வீதி 8-கீளம் வேஷ்டி1-க்கு " 3-8
S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.

## சட்ட விரோதமான சபைகள்.

பம்பாய் சர்க்கார் உத்திரவு.

5-11-34-ம் தேதி பம்பாய் சர்க்கார் கீழ்க்கண்ட சங்கங்கள் சட்ட விரோதமானவை யெனப்பிரகடனம் செய்திருக்கின்றதுடன், அவை உண்மையிலேயே தொழிலாளர் சங்கங்களன்று என்றும், பொதுவுடமை சங்கங்கள் தானெனத் தம் ஆராய்ச்சியில் வெளியாகின்றதென்றும் அப்பிரகடனத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

1. இளந் தொழிலாளர் சங்கம் 2. செங்கொடி கிர்னி காம்கார் சங்கம். 3. காம்கார் வங்கமதி பிரசாரக மண்டல். 4. மார்க்ஸிஸ்ட் சங்கம். 5. ஆலை மஸ்தூர் சங்கம்.

(சமதர்மம்)

## திருக்கோஷ்டியூரில் சாரதா வாசகசாலை திறப்புவிழா.

நாளது 16-11-34 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் புதுக்கோட்டை தோழர் கே. முத்துச்சாமி வல்லத்தரசு B. A., B. L., அவர்கள் இவ்வாசகசாலையைத் திறந்து வைப்பார்கள்.

அதுசமயம் பல அன்பர்களின் பிரசங்கமும் நடைபெறும் என்று சாரதா வாசகசாலையார் அறிவிக்கிறார்கள்.

## ஏஜண்டுகள் தேவை.

நமது 'பகுத்தறிவு" வாரப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு
1. பொனமலை
2. சாக்கோட்டை
3. சிவகங்கை
4. சென்னை
5. கோலார் தங்கவயல்.

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி
## யானைக்கால் குஷ்டம்
ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்,
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பெர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

### மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

### கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனுபிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணா 4

### குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடிஅரசில்எழுதிய தலைபங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி சேனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 3.

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

### மாணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அநுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.) விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல். விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது. விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4. அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமுடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும். விலை அணா 2.

## பர்னர்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னர்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.